# புதுவாழ்வு




ஆசிரியர்

க. அன்பழகன், எம். ஏ.

This page is in colour

Best copy available

# புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 சித்திரை 1. | மலர் 4

ஆசிரியர் :—க. அன்பழகன் எம். ஏ.,

துணை ஆசிரியர்:—கே. ஜி. இராதாமணாளன்.

## உள்ளுறை

எங்கள் வளநாடு ... 3
இசைப்பாட்டு

தூத்துக்குடி அழைப்பு ... 4
தலையங்கம்

நடம் ஆடும் அழகி ... 17
இலக்கியக் காட்சி

சாவா மருந்து ... 20
சிறுகதை

தமிழகத்தில் தாலி ? ... 24
ஆராய்ச்சி


முடிவுண்டா? ... 32
கவிதை

பொற்சிலை ... 33
தொடர்கதை

0, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை-7.

விலை அணா 4

15-ஏப்ரல்
1948





## திராவிடஸ்தான் வேண்டாமா?

வேண்டாம் என்கிறார் கம்யூனிஸ்டு தோழர். 'போர்வாள்' ஆசிரியர் மா. இளஞ்செழியன் தக்க மறுப்புரை வழங்குகிறார். இந்தக் கருத்துப் போர் இளைஞர்கள் படிக்கவேண்டியது. விலை அணா 0-8-0

★

## ஈரோட்டுப் பாதை

தீட்டியவர்: மா. இளஞ்செழியன் B. A. (Hons.) அலைகடலென எழுந்த எதிர்ப்புக்கிடையே-சுயமரியாதை இயக்கம் மடமடவென வளர்ந்த விதத்தைச் சித்தரிக்கின்றது. விலை அணா 0-8-0

[ஒரு ரூபாய் அனுப்புவோர்க்கு இரண்டும் தபால் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே அனுப்ப தபால் செலவு ஒரு அணா]

★

கிடைக்குமிடம்:

**பகுத்தறிவுப் பாசறை,**

**147. பவழக்காரத் தெரு, சென்னை. 1**

# ★ எங்கள் வளநாடு!

*நாரா நாச்சியப்பன்*

எங்கள் வளநாடு—திராவிடம்
எனத் தினந்தோறும் பாடு
எங்கள் வளநாடு !

நெல்லும் மணியும் கொழிக்கும் நாடு
நீரும் நிலமும் வளத்த நாடு
வெல்லும் வீரர் பிறந்த பொன்னாடு
வெற்றிவேல் கொற்றவர் மூவரின் நாடு
எங்கள் வளநாடு !

முப்புறக் கடலும் தெவ்வரை யடக்கும்
மூண்டெழும் வடவரை விந்தியம் தடுக்கும்
எப்புறப் பகையையும் இயற்கையே தடுக்கும்
எங்களின் தோள்வலி எவரையும் நடுக்கும்.
எங்கள் வளநாடு !

திராவிடர் என்றொரு சொல்லினில் தானே
திரண்டெழும் இருதோள் மலைகளும் பார்த்தே
இராமலே பகைவர்கள் ஓடிவாரேல்
எம்வாள் குருதியில் தோய்வ தெவ்வாறே ?
எங்கள் வளநாடு !

வாள்வலி தோள்வலி வீரமெல் லாமே
வாய்த்திடும் இன்பத் தேன்கவி யாலே
நீள் செவி வாயெலாம் குளிருமென் றாலே
நினைக்கவும் முடியா இன்ப நன்னாடே
எங்கள் வளநாடு !

புதுவாழ்வு

# தூத்துக்குடி அழைப்பு

வருகிற மே 1, 2, நாட்களில், தூத்துக்குடியில் திராவிடக் கழக மாகாண மாநாடு நடைபெறவிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாட்டு வரவேற்புக் குழுவினர் விரிவான திட்டமிட்டுப் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் பணி வெற்றி பெற, தமிழகம் முழுவதிலிருந்தும் ஏராளமான ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. மாநாட்டுச் செலவிற்கான பெருந் தொகையைச் சேர்ப்பதிலும் மற்ற மாவட்டத் தோழர்கள் தங்கள் தங்கள் பங்கைச் சேர்த்துதவத் தவற மாட்டார்கள். எனவே மாநாடு சிறப்பாக நடந்தேறுவது உறுதி என எண்ணி மகிழ்கிறோம். மாநாட்டு வரவேற்புக் குழுவினரையும் பாராட்டுகிறோம்.

இந்த மாநாடு மாகாண மாநாடு என்ற காரணத்தினால் மட்டு மன்றிக் கூடுகின்ற காலத்தாலும் முக்கியத்துவமுடையதாகும். மாகாண மாநாடு என்ற உடனேயே சேலம் நினைவிற்கு வருகிறது. சேலத்திற்குப் பின் அதன் விளைவாகக் கட்சியில் ஏற்பட்ட வளர்ச்சியையும், இளைஞர் பெற்ற எழுச்சியையும் காண்பிப்பது போல திருச்சி மாநாடு நடைபெற்றது.

திருச்சியில் கருஞ்சட்டை அணியவேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஒரு தீர்மானம் மட்டுமே புதிதாக உருவாயிற்று. இப்பொழுது சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் மாகாண மாநாடு நடைபெறவிருக்கிறது.

இந்த இடைப்பட்ட இரண்டாண்டுகளில் தான், மதுரை மாநாட்டுக் கொட்டகையிலே தீ, சேலத்திலே சித்திரவதை, கரூர் வழக்கு வதை, உடையார் பாளையம் கொலை, அண்ணாமலை நகர் தாக்குதல், திருவண்ணாமலைக் கைது, கருப்புச்சட்டை அணிவகுப்புக்குத் தடை, கழகங்களிலும் கழகத் தோழர் வீடுகளிலும் சோதனை, பெரியார் பேச்சுக்குத் தடை, ஆகிய இவ்வளவு நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. குறிப்பிட இய

லாதன பல. இவை ஒவ்வொன்றும் நம்முடைய இயக்கத்தின் போக்கில் ஏதேனும் சில சில விளைவுகளை (மாற்றங்களை) ஏற்படுத்தக் கூடியனவே என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எனவே அத்தகைய நிகழ்ச்சிகளையும் அதன் விளைவுகளையும் நாம் ஒன்றுகூடிச் சிந்தித்து விளக்கிப்பேசி, நமது இயக்கத் தோழர்கள் யாவருமே நமது போக்கில் உறுதி கொள்ளச் செய்யவேண்டும்.

இந்தச் சில நிகழ்ச்சிகளை மட்டுமே தீர்மானித்தாலும் போதாது. இதற்கு முன் நடந்த மாகாண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எந்த அளவிற்கு நிறைவேறியிருக்கின்றன என்பதையும் முழுவதும் நிறைவேற வேறென்ன செய்யலாம், எந்தெந்தப் புது முறைகளைக் கையாளலாம் என்பதையும் தீர்மானிக்கவேண்டும். இது எழுதிப்படிக்கும் தீர்மானமல்ல, கூடிப்பேசிப் பதியவைத்துக் கொண்டு உறுதியோடு நிறைவேற்றப்பட வேண்டியதாகும்.

இவற்றையெல்லாம், உற்சாகத்தோடு சிந்திக்கவும், உரிமையோடு விவாதிக்கவும், ஒன்றுகூடி நின்று பணியாற்றவும் இந்த மாநாட்டைவிட நல்ல வாய்ப்புக் கிடைப்பது அரிது. ஏனெனில் இந்த மாநாட்டிற்குத் திராவிடத் தோழர்கள் அனைவருடைய போற்றுதலுக்கும் ஆளாகியுள்ள பெரியாரவர்களே தலைமை வகிக்கக் கூடும். அவரது தலைமையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் எதுவும் நிச்சயமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயலில் வருவது எளிதாகும்.

நம்முடைய கழகத்தின் முதன்மையான, உயிர்போன்றதான தீர்மானமே திராவிட நாடு திராவிடருக்கே! என்பது. இந்த அரசியல் தீர்மானத்தை இதுவரையிலும் பொது மக்களிடத்தில் பரப்பி வந்துள்ளோம். எதிர்க்கட்சிக்காரர்களும் புரிந்து கொள்ளக்கூடிய அளவு விளக்கம் தரப்பட்டு விட்டது. கிராமம் கிராமமாக அலைந்து, பட்டி தொட்டிகளிலெல்லாம் நின்று, பகலென்றும் இரவென்றும் கருதாமல் பெரியாரவர்கள் நடத்திய பிரசாரத்தின் பலன் தான், இந்த அளவிற்குத் திராவிடநாட்டுப்பிரிவினைக்கொள்கை பாமரர்களும் புரிந்து கொள்ளும் நிலையைப் பெற்றுள்ளது. சென்னைப் பட்டினத்திலும், பிற நகரங்களிலும், பேரூர்களிலும் சிற்றூர்களிலும், திராவிடக் கழகங்கள் ஏற்பட்டுவிட்டன. கழகம் இல்லாத ஊர்களிலும் கழகக்கொடியேனும் பறக்கின்றது. அதுவுமற்ற இடத்திலும் கருப்புச்சட்டை அணிந்தோர் உலாவுகின்றனர். அச்சட்டை அணியாதவர்களிடத்திலேயும் பிரிவினைக்கொள்கை வேரூன்றிவிட்டது.

எத்தனையோ காங்கிரஸ் தோழர்கள், ஆரியம் வேறு திராவிடம் வேறு என்று பேசு

வதே தவறு என்று வெளியிலே கூறியவர்கள், எப்படி சமயம் வந்தபோது, திராவிட (பார்ப்பனரல்லாதார்) இன உணர்ச்சி வெளியிலே தெரியும்படியே நடந்து கொண்டு விட்டார்களோ, அப்படியே, அவர்கள் இப்போது கட்சிக்காக மறுத்துப்பேசி மறைத்து வைத்துக் கொண்டுள்ள திராவிடநாட்டுப் பற்றும்—அவசியம் ஏற்படும் போது வெளிவந்தே தீரும். அவர்கள் முற்றும் உணர்ச்சியற்றவர்களல்லவே !

மற்றும், திராவிடநாடு பிரிய வேண்டுமென்பதற்குத் தலைவரும் தளபதியும் இதுவரை காட்டிய காரணங்களுக்கு மேல் காட்டவும் இயலாது, கூடிய கூட்டங்களுக்கு மேல் கூட்டவும் முடியாது. இன்றுள்ள சூழ்நிலையைவிட இனி மற்றொரு நாள், நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கவும் இடமிருப்பதாகத் தெரியவில்லை.

இதற்குள்ள அவ்வளவு நியாயங்களைக் கூடப்பெறாத பாகிஸ்தான், நாம் செய்த அளவு இந்த மாதிரியான பிரச்சாரம் கூட இல்லாமல், நமக்குப் பின்னால் தொடங்கி, நாம் வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பதற்கு முன்னால் அவர்கள் வெற்றிக்கொடியையே நிலை நாட்டிப் பாகிஸ்தானையே ஆளுகிறார்கள். நம்மிடத்தில் அவ்வளவு கட்டுப்பாடு இல்லை என்பது ஒரு காரணமென்றாலும் அவர்களுக்கிருந்த கட்டுப்பாடான எதிர்ப்பையும், எதிர்க்கட்சியின் சூழ்ச்சியையும், முஸ்லீம்களுக்குள்ளேயே இருந்த பகைக்கூட்டத்தையும் நாம் மறந்து விடக்கூடாது. எனினும் அவர்கள் 'பாகிஸ்தானைப்' பெற்று விட்டார்கள். நமது திராவிடஸ்தானோ இன்னும் ஆட்சியாளரின் ஆலோசனைக்கும் வரவில்லை. அவர்களின் கவனத்தை இழுத்ததாக அவர்கள் காட்டிக் கொள்ளவுமில்லை. ஏன் இந்த நிலை என்பதையும், இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படியே விட்டு வைப்பது என்பதையும் தான் நாம் சிந்திக்க வேண்டும். இல்லையானால் பெரியாரவர்களின் பேருழைப்பு அரசியல் துறையில் விழலுக்கிறைத்த நீராகவே பயன் படாதொழியலாம்.

மேலும், நாள் கடக்கக்கடக்க நம்முடைய நோக்கம் ஈடேறாமல் செய்வதற்கான வழிவகைகள், சட்ட திட்டங்கள், அந்தக் குறிப்பைக் காட்டாமலே, மிக மிகத் தந்திரமாகப், பொது மக்களின் நன்மை, ஒற்றுமை என்ற பெயரால் உருவாகிக் கொண்டே இருக்கின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது.

ஆகஸ்டு 15ம் நாள், ஆங்கிலேயர்கள் ஆட்சிப் பீடத்தை விட்டு வெளியேறினார்கள் என்பது தத்துவத்தின்படி அந்நியர் ஆதிக்கம் விலகியது காரணமாகச் சுதந்திரமே யென்றாலும், நம்முடைய நிலையில் அந்தச் சுதந்திரமே இன்றைய அடிமை நிலையிலே

யே நம்மை அழுத்தி வைத்திருக்க வடநாட்டார்க்கு வழி கோலி விட்டது. ஆனால் இந் நாட்டுப் பொது மக்கள் இனியேனும் தங்களுடைய வாழ்க்கையிலே ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கும், வறுமைக்கும் தொல்லைக்கும் வடநாட்டார் ஆதிக்கங்கொண்ட ஆட்சியே காரணமாகும் என்பதை எளிதாக உணர்ந்து கொள்ளக் கூடும். இனியும் வெள்ளைக்காரர் பெயரால் வடநாட்டாரும், ஆரியரும் ஆதிக்கம் செலுத்த முடியாது. மக்கள், ஆதிக்கக்காரர்கள் யார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். எனினும், ஆரிய ஆச்சாரியார் ஆட்சியில் ஆதிக்க வெறி எப்படி தலை விரித்தாடியதோ, அப்படியே வடநாட்டார் ஆட்சியிலும் உள்ள நிலைமையினால் நம்முடைய கைவிலங்குகள் இறுகுகின்றன. இறுகுகின்ற போதே எச்சரிக்கை தேவை. விடுதலையின் பெயரால், கால்விலங்கு உடைந்த தன் மகிழ்ச்சியில் மூழ்கும் வேளையில்—கையிலே இருந்த பழைய விலங்கைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது அரசியல் நிர்ணய சபையாரால். இதன் முழு விளைவை எண்ணிப்பார்த்துத் திட்டமிட்டுப் பணியாற்றினாலொழிய 'திராவிடநாடு' அண்மையில் இல்லை.

மேலும் நம்முடைய சமுதாய சீர்திருத்தக் கொள்கைகள்—மிக மிக முற்போக்குடையவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தக் கொள்கைகள் ஒவ்வொன்றும் நம்முடைய பிரச்சார வேகத்தால் எந்த அளவிற்கு நாட்டிலே செல்வாக்குப் பெறுகின்றனவோ அந்த அளவைவிடக் குறைவாகவே, ஆளவந்தவர்களாகிய நமது மாற்றுக்கட்சியினரால் சட்டமாகக் கொண்டுவரப்பட்டு—மக்களிடம் 'சபாஷ்' பட்டம் பெற்றுக்கொள்ளத் துணையாகிறது. அவர்கள்பாராட்டுக்காளாகிறார்களே? என்பதையன்றுகுறிப்பிடுவது. அவர்கள் அந்தச் சீர்திருத்தங்களை அறைகுறையாகச் செய்தும் பாராட்டுக்காளாகிறார்கள் என்பதோடு, நமது கருத்துக்கள், கொள்கைகள், திட்டங்கள் எதுவும் அதன் முழுஉருவத்தில் நாட்டில் இடம்பெற்று விளங்க முடியவில்லை என்பதும், அதனாலேயே பொதுமக்களுடைய உள்ளத்தில் நமது முத்திரை நேரடியாகப் பதியக்கூடவில்லை என்பதுமே, நாம் எண்ணிப்பார்க்க வேண்டியன.

நமது திட்டங்களில் சிலவாயினும் நம்மாலேயே நேரடியாக நிறைவேற்றப்படும் போதோ, அன்றி நமது கிளர்ச்சியின் விளைவாகத்தான் நிறைவேற்றப் பட்டது என்பதைப் பொதுமக்கள் உணர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் போதோதான்—நமது மாபெரும் அரசியல் தீர்மானங்களுக்குப் பொதுமக்களின் ஆதரவு பெரும்பங்கு கிடைக்கமுடியும் என்பதோடு, செய்யப்படும் ஒவ்வொரு சீர்திருத்தமும்,

முழுப்பயன் விளைவிக்கக்கூடிய தாகவும் இருக்கும்.

அந்த நிலை தோன்றவேண்டு மானால் நம்முடைய கட்சியில்-இன்று நடைபெற்று வருகின்ற பிரச்சாரக் கருத்துக்களை ஒரு ஒழுங்குமுறைக்கு உட்படுத்தி மேலும் வலுப்பெறச் செய்வ தோடு, வேறு பல துறைகளி லும், நமது நோக்கம் நிறைவேற வழிவகை காணவேண்டும்.

பெரியார் அவர்களின் விருப் பத்திற் கிணங்க, திருச்சியில் நடந்த திராவிடர் மாநாட்டில் திரு. எஸ். முத்தையா (முதலி யார்) அவர்களும், டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், கட லூரில் நடந்த திராவிடநாடு பிரிவினை மாநாட்டில் திரு. வி. கல்யாண சுந்தரனார் அவர்களும் திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொண்ட தும், வேறுசிலரும், மற் றும் சில சமயங்களில் கலந்து கொண்டதும், திரு. டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியனார் அவர்கள், அண்மையில் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர் பார்ப்பதும் அதற்காக முயற் சிப்பதும் மகிழ்ச்சிக் குரியன. இவர்களெல்லாம் இயக்கத்தில் எப்பொழுதோ கலந்துகொள் வது என்ற நிலைபோய்-எப்பொ ழுதுமே கலந்து நிற்பது என்ற நிலை ஏற்படின் பயன் அதிக மாகும்.

இவர்கள், ஒவ்வொருவித போக்குடையவர்களாயிற்றே என்று கேட்கலாம். எனினும் ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக் குப் பலவித போக்குடையவர் களும் பயன் படக்கூடும். அவர வரும் தமது போக்குக்கேற்ற வகையில் செய்யக்கூடிய பணி யைச் செய்யச் செய்வது மூல மாகப் பயன் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, திரு. வி. க. அவர்களுடைய அரிய சொற்பொழிவுகளைக் கொண்டு பொதுமக்களையும், காங்கிரஸ் தோழர்களையும் மனம் மாறிக் கழகத்தில் சேரச் செய்யலாம். திரு. முத்தையா (முதலியார்) அவர்களைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையின் வேலைகளினால், திரா விட நாடு முழு உரிமைபெற்ற ஒரு நாடாகத் திகழத் தடை யாக அமைக்கப்படும் சட்டங் களைக் கண்டறிந்து, அவற்றை அறிவுலகில் விவாதத்திற்கா ளாக்கச் செய்யலாம். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை வெளி நாடுகளுக்கெல்லாம் அனுப்பிப் பிரிவினையின் அவசியத்தை விளக்கச் செய்யலாம். திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு இன்று ஆளவந்தவர் களிடையே நடைபெறும் ஊழல்களை அம்பலப்படுத்துவ தோடு நமக்காக யாரைக் கண் டும் நேரடியாக விவாதிக்கச் செய்யலாம். இப்படியே ஒவ் வொரு துறையிலும் ஒவ்வொரு வருடைய ஒத்துழைப்பை முழு அளவிற்குப் பெற்றாலொழிய அவர்களுடைய 'திறன்' இயக் கத்திற்குப் பயன் படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. மற்றும் இவர்களைப் பொருத்த வரையில்

நம்முடைய கழகத்தில் உள்ள ஒரு சில கொள்கைகளில் மட்டுந்தான் ஆழ்ந்த பற்றுக்கொள்ள முடிகிறது. எந்தக் கொள்கையையும் மறுக்காமல் இருந்த போதிலும் சிலவற்றையேனும் ஒப்புக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். இராமாயணம் பெரியபுராணம் ஆகியவற்றைக் கொளுத்துவதை திரு. வி. க. அவர்களும், தீவிர மத எதிர்ப்புப் பிரசாரத்தை திரு. எஸ். முத்தையா (முதலியார்) அவர்களும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மாலையில் பொதுக்கூட்டத்திற்குப் போகுமுன் திருநாமம் தரிப்பதைக் கைவிடுவதும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கு இயலாதது. தேர்தலுக்கு நிற்பதை எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தக்கூடாது என்பவர் திரு. பி.பாலசுப்பிரமணியம் அவர்கள். எனினும் இவர்களனைவருக்கும் உள்ள இனப்பற்றும் நாட்டுப் பற்றுமே, கழகத்தினரால் கூட்டப்பட்ட மாநாடுகளில் கலந்து கொள்ளக் காரணமாயின.

எனவே நமது கொள்கைகளில் அமைந்துள்ள இருவித போக்குகளில் ஏதேனும் ஒன்றைத் தழுவுபவர் மற்றொன்றைத் தழுவத்தயங்குவதையும் அதனாலேயே இயக்கத்தினிடத்தில்-முழுப்பற்றுடன் பணியாற்றுமையையும் காணுகின்றோம். நம்மைப்போன்ற இளைஞர்களுக்கு வேண்டுமானால், பெரியாருடைய சமுதாய அரசியல் கருத்துக்களை ஒருசேரத் தழுவி நிற்பது எளிதாகலாம். ஒருவிதமாகத் தங்களுடைய கருத்துக்களை ஏற்கனவே பதிய வைத்துக்கொண்ட பெரியவர்களுக்கு ஒவ்வோரளவுதான் ஒத்துழைக்க இயலக்கூடும். அந்த உழைப்பையும் நாம் சரியான வழியில் பயன்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது.

அவர்களுடைய ஒத்துழைப்பு தேவையில்லை என்று கூறிவிடக் கூடிய நிலையில் நமது அரசியல் கொள்கை வெற்றிபெற்றுள்ளதாகவும் தோன்றவில்லை. எனவே அவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் திட்டங்கள் வகுக்க வேண்டும்.

நமது இயக்கம் இன்றளவும், அரசியல்கட்சி வேறாகவும், சமுதாய இயக்கம் வேறாகவுமே இருந்துவந்தபோதிலும், பொதுவாக நடைமுறையில் இரண்டும் ஒன்றாகவே ஆகிவிடுகிறது என்பதோடு—சில சமயங்களில் இரண்டும் பிரிக்கவியலாமல் குழப்பப்படுகிறது. நமது மக்கள் இரண்டையும் பின்பற்றுவதனால் விளைவதல்ல அக்குழப்பம். சமுதாய இழிவுகளைத் துடைக்கும் இயக்கத்திற்கு எத்தகைய பிரச்சாரம் மட்டும் நடந்தால் போதுமோ, அதே பிரச்சாரம் மட்டுமே அரசியல் இயக்கமாகிய திராவிடக் கழகத்திற்கும் நடைபெறுவதாலேயே அக்குழப்பம் தோன்ற இடமேற்படுகிறது. ஒரு அரசியல் கட்சிக்குள்ள—திட்டங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டால்

மட்டும் போதாது. அந்தப் பிரசாரத்தைப் பன்மடங்காகத் தோற்றுவித்துக்காட்டும் விளம்பரமும், இருக்கின்ற ஆதரவைப் பெருக்கிக் காட்டும் பத்திரிக்கை பலமும், உலகமே அதைப்பற்றி அறிந்துகொள்ளச் செய்யும் முறையும், மாற்றுக் கட்சித்தலைவர்களும் அதைப்பற்றி எண்ணிப்பார்க்கவேண்டிய அவசியமும், சட்டசபைக்குச் செல்ல விழைவோர் ஏன் இந்தக் கொள்கையின் மேல் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று ஆசைப்படுகின்ற நிலைமையும்- ஒரு அரசியல் கட்சியின் வெற்றிக்குரிய தேவைகளாகும்.

ஒரு கழகச் செயலாளர் ஆண்டு அறிக்கை வாசிக்கும் போது—அவ்வாண்டில் தாம் நடத்திய கூட்டங்களை யெல்லாம் குறிப்பிடுவது போல—எந்த அரசியல் கட்சியும், பிற கட்சிக்காரர்களையும் தன் பக்கம் இழுக்க அது நிறைவேற்றியுள்ள செயல்களை அவை அப்போது தோல்வியுற்றிருந்த போதிலும் எடுத்துக் கூறி விளக்கவேண்டும். அதாவது செயல்களைக் குறிப்பிடுவது மூலமாகத் தாங்கள் அந்தக் குறிக்கோளுக்காக எடுத்துக்கொள்ளும் நேர்மையான நடவடிக்கைகளால் அடைகின்ற கஷ்டநஷ்டத்தை எடுத்துக்காட்டிப் பொதுமக்களுடைய இரக்கத்திற்குக் காரணமாக வேண்டியதோடு, அரசியல் இயக்கத்தின் உயர்ந்த குறிக்கோளையும் உணரச் செய்யவேண்டும்.

ஒரு அரசியல் கட்சிக்கோ—குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேறுவிட்டால் - அதற்குப் பின் நிறைவேற்றப்பட முடியாத, நிறைவேற்றத் தேவையில்லாத தீர்மானமும் இருக்கக் கூடுமாதலால், அதில் ஈடுபட்டுள்ளவர்கள் - அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கொண்டும், படிப்படியாக வளரும் திட்டங்களைக் கொண்டுமே தமது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, புது முறுக்குடன் பணியாற்ற வேண்டும்.

சேலத்திற்குப்பின் நமது அரசியல் திட்டத்தில் மாறுதல் இல்லை. அதில் ஏதேனும் தவறுண்டா என்று ஆராய்ந்து திட்டத்தை விரிவுபடுத்தவும் இல்லை. இவையெல்லாம் தலைவருடைய தவறுகளுமல்ல. ஒரு தலைவர் எந்த அளவிற்கு ஒரு கொள்கையை வலுப் பெறச் செய்யக் கூடுமோ, - எந்த அளவிற்கு ஒரு ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் நிலை நிறுத்த முடியுமோ, அந்த அளவிற்கு மேலாகவே அவர் தனது கடமையைச் செய்துவிட்டார். ஆனால் கட்சியில் பொறுப்புள்ளவர்கள் என்ற நிலையில் இருப்பவர்கள் - கட்சியின் தீர்மானங்களைக் குறித்தும், திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் குறித்தும் சிந்திக்காமையே அதற்குக் காரணமாகும். பிற அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் வெற்றியடைய என்னென்ன முறைகளைக் கையாண்டது என்பதைக் கண்

டறிந்து அவற்றை, நம் நிலைமைக்கேற்பவும், இன்றைய ஆட்சியினரின் போக்கிற்கேற்பவும் எப்படி எப்படிக் கையாளலாம் என்று கலந்தாலோசித்து முடிவுகட்ட வேண்டும்.

பெரியார் அவர்கள் ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைத்தால், அதை அவரிடமே திரும்ப ஒப்படைத்து விட்டுத் தங்களுக்கு ஏன் அந்தப் பொறுப்பு என்று எண்ணி மகிழ்பவர்கள் பலர். அது தவறு. உலகப் பெரியார் காந்தியார் - வெற்றிபெற அவருடைய உறுதியும் உயர்நோக்கமும் காரணமென்றாலும், அவருடன் இருந்து தொண்டாற்றியவர்கள், அவருடைய பொறுப்புள்ள கடமைகளில் பங்கெடுத்துக் கொண்டு - அவருக்கு அளித்த ஆறுதலும், சிற்சில சமயங்களிலேனும் அளித்த ஓய்வுமே அவர் இவ்வளவு காலம் வாழ்ந்திருந்ததோடு, வெற்றி விழாவைக் கண்டு மகிழவும் வாய்ப்பு அளித்தன.

மேலும், தலைவரிடம் தனிப்பட்ட முறையில் அன்பாக நடந்து கொள்வது என்பதற்கும், கட்சியின் வளர்ச்சிக்காகத் தலைவரோடு கலந்து அவரோடு ஒத்துழைப்பது என்பதற்கும் வேறுபாடுண்டு. தலைவரிடம் அன்பு காட்டுவதுஎளிது. ஆனால் அவர் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துவிட்ட கொள்கையில் வெற்றிபெற, அவர் காலத்தில் இயலாவிடினும் அவருக்குப் பின்பேனும் நிச்சயமாக வெற்றிபெறவேண்டும் என்ற உறுதியோடு உழைப்பது கடினம். தலைவரிடம் 'அன்பு' காட்டுவது அவர் உழைத்து அலுத்துக் களைத்துச் சாய்ந்துள்ள நிலையில் சிறிது ஆறுதலாக மட்டுமே இருக்க முடியும்; ஆனால் கட்சியிலே பொறுப்புடன் உழைப்பது அவர் களைத்து விழவேண்டிய அளவிற்கு உழைக்கவேண்டிய தேவை இல்லாமலே அவருடைய அரிய திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

மேலும் நம்முடைய சமுதாயக் கொள்கைகளையும், அரசியல் கொள்கைகளையும் நிறைவேற்றுவதில் உள்ள வேறுபாட்டையும் உணரவேண்டும். சமுதாய முற்போக்குக்கான கொள்கைகள் உலகின் பிற பகுதிகளில் ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப வளர்ந்துவிட்டன. எனவே நமது சமுதாயக் கொள்கைகள் இங்கேயே பரப்பப்பட்டால் போதும், இந்த நாட்டுக்கு மட்டுமே அவசியமானதால்.

ஆனால் எந்த அரசியல் கொள்கையும் இன்று உலகநாடுகளின் ஆதரவைப் பெறுவது அவசியமாகிவிட்டது. அதிலும் ஒரு நாட்டை, முழுஉரிமையுள்ளதாக அமைக்கும் பிரச்சினை, உலக அரங்கிற்குக் கொண்டு போகப்படத்தான் வேண்டும். உலக மக்களின் முன் அதை எடுத்துக் கூறும்போதுதான் - நம்முடைய நாட்டிலேயே அது முழுவலிவு பெறக்கூடும். ஏனெ

-ணில், இந்நாட்டு ஆட்சியில் ஆதிக்கம் பெற்றுள்ளவர்கள் - அந்த நிலையில்தான் அதைப்பற்றி முடிவுகட்ட விரும்புவார்கள். அதுவரையில் நமது விடுதலைப் போரை மதித்து நடந்து கொள்வார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. நம் நாட்டு மக்களும் - ஒரு செய்தி மிகப் பெரிதாக ஆக்கப்பட்டதற்குப் பின்னால்தான் - கண்விழித்துப் பார்த்துத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் போக்கினர்.

மேலும், இந்தத் துணைக்கண்டத்தின் அரசியல் நிர்ணயசபையின், இறுகப் பிணைக்கும் அரசியல் அமைப்பின்படி—எந்த ஒரு பகுதியும் பிரிந்துபோக வேண்டுமானால்—விடுதலை பெற்று உரிமையோடு வாழ வேண்டுமானால்—மிச்ச இந்தியாவின் சட்டசபையில், நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்களின் ஆதரவைப் பெற்றாக வேண்டும். ஒருவேளை சட்டசபையில் உறுப்பினராக உள்ள பல மாகாணத்தவர்களும்பிரிந்து கொண்டால் போதுமென்று விரும்பினால் மட்டும், அந்தச் சூழ்நிலையில் நாமும் பிரியக்கூடலாம். ஆனால் அப்பொழுதும் இங்கிருந்து சென்றிருக்கக் கூடிய பரப்பிரம்மங்கள்சேர்ந்தே இருக்கவேண்டும் என்று கை தூக்கிவிட்டால்பிரிய விரும்பிய பிறருக்கும் உரிமை பறி போகின்ற பரிதாபகரமான நிலையே ஏற்படும்.

எனவே — 'திராவிடநாட்டை'ப் பெறவேண்டுமானால், மிக விரிவான, பல கிளைகளையுடைய, பல அறிஞர்களின் கூட்டுமுயற்சிகொண்ட வேலைத் திட்டம் தேவை. திராவிடநாடு யார் யாருடைய எதிர்ப்பைப் பெற்றிருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்தால்— அதைப் பெறுவதில் உள்ள கடினம் விளங்காமற் போகாது. இன்று ஆதிக்கம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியும்' அதன் தலைவர்களான காங்கிரஸின் எஃகு மனிதர் பட்டேலும், அதன் பிரசாரப்பிரதமர் ஐவகரும், அதன் ஆட்சியில் புதிதாக இடம்பெற்றுள்ளதால் தமது புதுபக்தியை நிலைநாட்டிக்கொள்ளவேண்டிய அம்பேத்கார் சண்முகங்களும், வங்காள கவர்னராக இருந்தபடியே வைசிராயாக ஆருடம் பார்க்கும் சாணக்கியர் ஆச்சாரியாரும், இந்த மாகாண அமைச்சர்களும், அமைச்சர் வேலையைச், சட்டிசுட்டும் கை கொப்புளித்த பின்னரே விட்டுவிட்டு அம்பேசடராக ஆவலாய்ப்பறக்கும் சுப்பராயன்களும், தமிழகத்தின் வாழ்வையே அரித்துத்தின்னும் விஷப்பூச்சிகளான வைத்திய நாதய்யர் வரதாச்சாரி கூட்டமும், அந்தக் கூட்டத்தின் எடுபிடிகளும், ஆழ்வாராதிகளும், நாட்டிலே நடமாடும் தினசரிகள் அனைத்தும், பிற ஏடுகளில் பெரும்பகுதியும், அரசாங்கத்தின் கையிலுள்ள வானொலியும், ஆரிய ஆதிக்கம் கொண்டசெய்தி ஸ்தாபனங்களும், பொதுமக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிப்பணமும், அரசாங்கம்

பொதுமக்களின் அமைதியைக் காப்பாற்ற என்ற பெயரால் கொண்டுவரும் அடக்குமுறைச்சட்டங்களும், அதை நிலைநாட்ட என்றுள்ள போலீசும், அதன் கையிலுள்ள தடியும், தோட்டா துப்பாக்கியும், கண்ணீர்ப்புகையும், இவைகளையெல்லாம் ஆதரித்து நிலைநிறுத்த பக்கபலமாக உள்ள வடநாட்டு வாணிபக் கூட்டங்களான மார்வாரி, குஜராத்தி, பனியாக்களும், இந்தியாவின் போர்டுகளான டாட்டாவும் பிர்லாவும், அவர்களைக் கூட்டாகக் கொண்டு கொள்ளையில் பங்கு பெறும் வெளிநாட்டுப் பணமூட்டைகளும், நாட்டு நிர்வாகத்துக்கே டாலர் கடனுதவி செய்ய அலையும் வல்லரசுகளும், இந்த அமைப்பு அப்படியே நீடிக்குமா, ஆபத்து ஏற்படுமா என்று வட்டமிட்டுக் கண்காணிக்கும் ஆரிய வல்லூறு சசிவோத்தம சர் சி. பி. இராமசாமியும், அவருக்குத் துணையாக இங்கேயுள்ள ஆரிய இனத்தவரும், அவரது இதிகாச சாஸ்திர புராணங்களும், அவற்றின் ஊழல் வெளிப்படாமல் இருக்கவே 'கடவுள்மொழி' என்று புளுகப்படும் இந்த வடமொழியும், அம்மொழிக்கும் அதை ஓதும் சாஸ்திரிகளுக்கும் புரோகிதர்களுக்கும் மதிப்பளிக்கும் நமது கோயில்களும், அங்கு அசையாமல் ஆடாமல்- ஆறுவேளை யுண்டும் அஜீரணம் ஏற்படாமல்—கல்லுப் பிள்ளையாரெனக் காத்துக்கிடக்கும் கடவுள்களும், திராவிடநாடு பிரிவினைத்திட்டத்தை எதிர்க்கும் சக்திகளாகும். இவ்வளவையும் எதிர்த்து நாம் செய்யும் பிரச்சாரம் — பொதுமக்களின் உள்ளத்தில் சென்று படிவதே கடினம். பொதுமக்கள் மனதிலே படிந்தபின்னும் நம்நாட்டவர் அல்லாதவர்களோடு நாம் எவ்வளவு பெரிய போராட்டம் நிகழ்த்த வேண்டியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அதனாலேயே நாம்நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. பகைவர்கள் மத்தியில் உலவுபவனைப் போல நாம்கவனத்தோடு நடக்க வேண்டும். பகை சிறிதாயினும் திட்டமிட்டு எதிர்த்தால்தான் வெற்றி நிச்சயம். நமக்கோ பகை பெரிது, மிகப்பெரிது. நம்முடைய இலட்சியமோ அதனினும் பெரிது என்ற காரணத்தாலேயே நாம் போரிடத் தீர்மானித்துள்ளோம். போரிலே இடுக்கித்தாக்குவதும், எதிர்த்துத் தாக்குவதும், பதுங்கித்தாக்குவதும் என்ற பலமுறையைக் கையாளுவதும் வெற்றிக்கு அவசியவது போல - அரசியலிலும், பலவித முறைகளைக் கையாளுவது வெற்றி பெற அவசியமாகும். இவற்றைக் கண்டறிய மாநாட்டிற்கு முன் கூடும் விஷயாலோசனைக்குழு இவை பற்றி விவாதித்து முடிவுசெய்ய வேண்டும். முடிவு செய்வதை மாநாட்டில் மட்டுமன்றிச் செயலிலும் நிறைவேற்ற வேண்டும்.

உண்மையில் நமது அரசியல் கொள்கையின் உடனடியான

வேலையாக - திராவிடநாட்டு அமைப்பைக் குறித்து-ஆந்திரர் -கன்னடியர் கேரளியர் ஆகியோர் கருத்தை அறியவேண்டும். நாம் முதலில் பிரிந்து விட்டால்-பின்னால் அவர்கள் நம்மோடு சேர்ந்து கொள்ளட்டுமே என்று கருதலாம். அப்படியானால் நாம் கூறும் எல்லை உறுதிப்படாது என்பதோடு, அதைக் காரணமாகக் கொண்டே நமது கோரிக்கை பலவீனப்படுத்தப் படலாம். மேலும் இந்தியச் சட்ட சபையில் (பார்லிமெண்டில்) நாம் ஆதரவும்தேடியாக வேண்டும். அதற்கு நம்மோடு சேர்ந்து வாழக் கூடியவர்கள் என்று நாம் எதிர்பார்க்கின்ற, நமது நாட்டினரின் ஆதரவைக்கூட பெறாமல் எப்படி 75 சதவிகிதப்பெரும்பான்மை ஆதரவைக் காணமுடியும்? ஓரளவேனும் நமது கொள்கை வலுப்பெற, அந்நாட்டுத் தலைவர்களுடைய தொடர்பை இன்றே பெற்றாலன்றோ, வருகின்ற தேர்தலில் இல்லையானாலும், அதற்கடுத்த தேர்தலிலேனும், இந்தக் கொள்கையுடைய தோழர்களைத் தமிழ், தெலுங்கு, கன்னடம், கேரளம் ஆகிய பகுதிகளின் பிரதிநிதிகளாக-இந்தியச் சட்ட சபைக்கு அனுப்பக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அவர்களிலே எவரும் திராவிட நாட்டு அமைப்பை மறுக்க வில்லையே, ஏன் கவலை என்று கேட்கலாம். நமது பிரச்சாரம் அந்தப் பகுதிகளில் வலுப் பெறாததாலேயே இந்த நிலைமை இருக்கலாம். வலுப்பெற்றால்-அங்குள்ள ஆரியம் தன் வேலையைக் காட்டத் தொடங்கலாம். என்ன நேரிட்டாலும் வலுப்பெறச் செய்தே ஆகவேண்டும், நமது அரசியல் நோக்கம் வெற்றி பெற வேண்டுமானால்.

எனவே தான் இம் மாநாட்டிலேயே - பெரியாரவர்களின் நோக்கத்தினின்றும் மாறுபடாத சில தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி அவர்களின் மூலம் ஆந்திர சமாஜத் தலைவர்கள், கேரள சமாஜத்தலைவர்கள், மைசூர் தலைவர்கள் ஆகியவர்களைக் கண்டு பேசி, திராவிடக் கூட்டாட்சியைப் பற்றிய அவர்களுடைய கருத்தை அறிய வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்ளக் கூடும். ஒருவேளை மறுப்பார்களேயானால், அந்நாட்டுப் பொதுமக்களிடத்தில் அங்குள்ள வாலிபர்களைக் கொண்டு -பிரச்சாரம் செய்து வெற்றி காணமுடியுமா? என்றும் முயற்சிக்க வேண்டும்.

இவைகளை நடத்திவைப்பது பெரியாரவர்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் எளிதன்று. ஏனெனில் அவர் நீதிக்கட்சியின் தலைவராக அமைந்ததிலிருந்து, ஆந்திர-கன்னடத் தலைவர்களில் சிலரோடேனும் ஏற்பட்ட தொடர்பும், அவருடைய வயதும், அனுபவமும் அவர்களை இணங்கச் செய்யத் துணையாகும். அவர்கள் இணங்காவிடினும், பெரியாரவர்கள் அவரவருடைய மொழியிலேயே விளக்

கிப் பேசுவது மூலமாக அந்தந்தப் பகுதி மக்களுடைய உள்ளங்களையும் கவர்ந்து விடக்கூடும். எனவேதான், பெரியாரவர்களால் மட்டுமே உருவாகக் கூடிய இத்திட்டத்தை-அவருடைய தளர்ச்சிக்குமுன் நிறை வேற்றிக் கொள்ள-இம் மாநாட்டிலேயே திட்டமிட வேண்டுமென விரும்புகிறோம்.

இவ்வளவு பெரிய ஒரு தலைவரைக் கொண்டு செய்யும் இம்முயற்சியே வெற்றி தராவிடினும், வேறு வழியில்லை என்று முடிவாகத் தெரிந்தாலும், நமது அரசியல் திட்டத்தையே அதற்கேற்ப அமைத்துக் கொண்டு, நிலைமையை விளக்கி விடலாம்.

மேலும், நமது திராவிட நாட்டுப் பிரிவினையை நிறை வேற்றுவதற்குரிய திட்டங்களை ஆலோசித்துக் கூறவும், சட்ட திட்டப்படி நிறைவேற்றுவதற்குரிய வழி வகைகளைக் காணவும், இந்தியப் பிரதமர், பிற தலைவர்கள், இந்திய பார்லிமெண்டில் உள்ள திராவிட நாட்டைச் சார்ந்த உறுப்பினர்கள், வைஸ்ராய் ஆகியோரைக் கண்டு பேசவும் மேற்கூறிய ஆலோசனைக்குழுவினர் முயற்சி செய்ய வேண்டும்.

நமது திராவிடக்கழகம் ஒரு அரசியல் கழகம் என்பதனாலேயே மேலே காட்டிய சிலவற்றையேனும்-நாம் நன்றாகச் சிந்தித்து-நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அரசியல் இயக்கம் அன்று என்று கூறிவிடுவதானால், அதன்பின் 'திராவிட நாடு' பிரிவினைத் திட்டம் எப்படி நிறைவேற்றப்படும் என்பதையேனும் கண்டறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந் நிலையில்-நமது பெரியார் அவர்கள் தலைமையிலேயே சுயமரியாதை இயக்கம் தனியாகவும் திராவிடக் கழகம் தனியாகவும் வேலை செய்வது நல்லது. இரண்டுக்கும்-தனித் தனியே தலைவர்கள், செயலாளர்கள், செயற்குழுக்கள் தேர்ந்தெடுத்து வேலை செய்வதும் வேண்டும்.

சுயமரியாதைக் காரர்களாகிய நாம் யாவரும் திராவிடக்கழகத்தில் இருந்தாலும்-திராவிடக் கழகத்திற்கு அதன் அரசியல் திட்டத்தையே முக்கியமாக்கி-வேறு பலரும் அதில் இடம் பெற்று உழைக்கச் செய்யலாம். இப்பொழுதோ திராவிடக்கழகத்தில் அரசியல் கொள்கைக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏற்படவில்லை. பல சமயங்களில் அது அரசியல் கழகம் அல்ல என்பதுபோலும் பேசப்படுகிறது. நம்முடைய சமுதாய இழிவைத் துடைக்கும் பணிக்குச் சுயமரியாதை இயக்கமே தொண்டாற்றக் கூடும்.

எனவே - திராவிடக் கழகத்தின்-மாபெரும் நோக்கம் நிறைவேற, அது ஒரு வன்மையான, பலமுள்ள, அரசியல் கட்சியாக

வளர்ச்சியுற தூத்துக்குடி மாநாடு பயன்பட வேண்டும்.

நம் இழிவை எடுத்துக் காட்டும் கருஞ்சட்டை அணிந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, நடத்தப்படும் இம்மாநாடு-அவர்களை வெற்றிப் பாதையிலே நடத்திச் செல்ல அமைந்த பாசறையாக விளங்கட்டும். 1917—மே-நாள் உலகமே மறக்கமுடியாத நிலையில் தொழிலாளர் நாளாக நிலை பெற்று விட்டது. தூத்துக்குடி மாநாடு கூடும் இந்த 1948—மே நாளும் திராவிடநாட்டு வரலாற்றில் பொறிக்கப் படும் நிலை பெறட்டும்! பெரியார் அவர்களின் தொண்டை நிலை நிறுத்தும் தூணாக விளங்கட்டும்! தூத்துக்குடி தோழர்கள் வெற்றி காணட்டும்! திராவிடம் மலரட்டும்!


# மங்கள தினங்களில்

நீங்கள் அளிக்கும் வெகுமதிகள் சோபிதமடைய மதராஸ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தார் அளிக்கும் உயர்தர ஆடை வகைகளே சிறந்தவை.

நவீன மாதிரிகள், புதிய ரக கோல வேலைப்பாடுகள், மற்றும் நாகரிகமான சாய வண்ணங்கள்.

இக்குணங்களே அவற்றை உங்கள் தேர்ந்தெடுப்புக்கு உகந்ததாக்குகின்றன.

## நெசவாலையிலிருந்து நேரில் உங்களுக்கே

மதராஸ் கைத்தறி நெசவாளர்
மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்

“ஹாலோவேஸ் கார்டன்ஸ்”

34. பாந்தியன்ரோட், எழும்பூர், மதராஸ்.

# ஒலிக்கும் சிலம்பு

இரா. குழூஉத்தலைவனார்.

## நடம் ஆடும் அழகி.

கண்ணிற்கு இனிமைதரும் காவிரிப்பூம் பட்டினத்தினுள் நாம் நுழைவோம். அரசனுடைய அரண்மனையைச் சூழ்ந்துள்ள பகுதிக்கு அகநகர் என்று பெயர் வழங்குகின்றது. தேர்ஓடும் தெருக்கள் ஒன்றை ஒன்று எதிர்ப் படும் இடம் ஒன்றில் பவழக் கால்கள் நாட்டப் பட்ட மன்றம் ஒன்று காணப் படுகின்றது. இது ஓர் நாட்டிய மன்றம். சிற்ப நூற் புலவர்களின் திறமை முழுவதுங் கூட்டிச் செய்யப் பட்டதாக இருக்க வேண்டும் இவ்வரங்கம். பூவேலைப் பாடுகள் ஒவ்வொரு தூண்களிலும் மேற் கட்டிடங்களிலும் காணப் படுகின்றன. நடுவில் பளிங்குக் கற்களால் இழைக்கப் பட்ட ஓர் மேடை. அதனை மூன்று பிரிவுகளாக வகுத்து மூன்று சித்திரத் திரைகள் விடப்பட்டிருக்கின்றன.

கலீர்! கலீர் என்ற காற் சிலம்பின் ஒலி கேட்கின்றது. குழலும் யாழும் குழைவதைப் போன்று யாரோ பாடுகின்றார்கள்; திரை விலகுகின்றது. அடடா! என்ன அழகான காட்சி! இன்பமான தோற்றம்! பொன் மலர்கள் பூத்த பூங்கொடி போன்ற பூவை ஒருத்தி நடமாடுகின்றாள். புன்னகை தவழும் இதழ்கள்! ஆடவர்கள் உயிரையே துளைத்திடுகின்ற அம்புபோன்ற கண்கள்! அழகு முழுவதும் திரண்டு வந்து ஆடல் செய்கின்றதோ! அணங்கோ! அரமகளோ என்னும் ஐயத்தோடு கண் கொட்டாமல் நோக்குகின்றனர் யாவரும். அழகு; அழகுக்கேற்ற ஆடல்; ஆடலுக்கேற்ற பாடல். இம் மூன்றில் முதன்மை பெற்றது எது என்றுதான் கூற முடியவில்லை. குறைவில்லாமல் கூடி நிற்கின்றன இம் மூன்றும் அவளிடம்;

> " ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
> கூறிய மூன்றின் ஒன்றுகுறை படாமல்".

அம் மடமானின் குறுகுறுத்த கண்கள் சுழலுகின்றன. கடைகளில் குழைந்து சுருண்ட கூந்தல் இன்னும் அவள் அழகிற்கு அழகு செய்கின்றன. மணம் வீசும் மலர்க் கொத்துக்களை அவள் கூந்தலில் செருகி யிருக்கின்றாள். இளைஞர்களின் உயிர்களுங் கூட அவற்றோடு செருகப் பட்டிருக்கத்தான் வேண்டும். இல்லா விட்டால் அவை குலுங்கும் போது இவர்கள் உள்ளங் களும் குலுங்க வேண்டியதில்லை யல்லவா!

இவள்தான் புலவர்கள் புகழ்ந்த புகார் நகரத்து அழகி-மாதவி. கருமையான முகிலில் தோன்றும் மின்னற் கொடி போன்று, கணிகையர் குடியில் பிறந்த காரிகை.

"பிறப்பில் குன்றுப் பெருந்தோள் மடந்தை
தாதுஅவிழ் புரிகுழல் மாதவி".

[குன்று: குறையாத. தாது அவிழ்: மணம் விரிந்த. புரிகுழல்: கடை சுருண்ட கூந்தலை உடைய]

குடியின் முறைமைப்படி ஐந்தாவது ஆண்டில் மாதவிக்கு நாட்டியம் கற்பிக்கப் பட்டது. ஆடல் ஆசிரியனிடத்தில் ஆடலும், பாடல் ஆசிரியனிடத்தில் பாடலும், குழல் யாழ் முதலியனவும், செந்தமிழும் ஆகிய இவற்றை ஏழு ஆண்டுகள் பயின்று முழுத்திறமை அடைந்து விட்டாள். அவளிடம் அளவிற்கு மீறிய அழகும் குடி கொண்டிருந்தது. அவளது கட்டழகு, முனிவர்களையும் கூடக் கருத்திழக்கச் செய்ய வல்லதாயிருந்தது. எல்லா வற்றிலும் நிரம்பியுள்ள தன்மகளை அரசன் முன்னிலையில் ஆடச் செய்து தலைக்கோல் பட்டம் பெறச் செய்து விடவேண்டும் என்று அவளின் தாய் சித்திராபதிக்கு நீண்ட நாள் எண்ணம். (எல்லோரினும் சிறந்த ஆடல் பாடல் அழகு இவற்றையுடைய மகளிர் அரசனால் போற்றப் பட்டு முதன்மையான சிறப்பை அடைவதற்குத் 'தலைக்கோல் பட்டம்' என்று பெயர்.)

அரசன் முன்னிலையிலேயே அரங்கேற்றம் நடை பெறுவதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்படவே மாதவியும் குறிப்பிட்ட நாளில் நடம் ஆடினாள். சோழன் முன்பு தொடங்கப்பட்ட நாட்டியக் காட்சிதான் நாம் மேலே தீட்டியது.

இதைப் போன்ற ஓர் பெண்ணின் நாட்டியம் அரங்கேற வேண்டுமாயின் அக்காலத்தில் இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்தாக வேண்டும். தலைக்கோல் என்ற பெயருடைய நாட்டியக் கோலைத் தூய்மையான ஆறுகளிலிருந்து கொண்டுவந்த நீரினால் நன்றாக ஆட்டுவார்கள். பின்பு அதற்கு மணப்பொருள்களைத் தடவி, மலர் அணிவித்து, புகை காட்டி வழிபட்டு வணங்குவார்கள். இத்தலைக்கோல் பகை மன்னர்களின் குடைக் காம்பை நறுக்கிக் கடைந்து செய்யப்படுவது வழக்கம். கணுக்கள் தோறும் பொன் தகட்டால் பூண்கள் கட்டி இடைவெளி தெரியாமல் மறைத்திருப்பார்கள். மணிகள் பதிக்கப்பட்டிருக்கும். இக்கோலை நடனம் அரங்கேறும் முன்பு பட்டத்து யானையின் கையில் கொடுத்து நகரத்தை வலமாக வரச் செய்வார்கள். [கடைசியில் இது நாட்டிய அரங்கில் அரசன் முன்னிலையில் ஓர் உயர்ந்த பணைமீது வைக்கப்பட்டிருக்கும்.]

முரசுகள் முழங்கக் கருவிகள் ஒலிக்க, தேரும் குதிரைகளும் நிரை நிரையாக வர ஊர்வலம் புறப்படும். அரசனும், ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும் இவ்வூர்வலத்தில் வருவது வழக்கம். முடிவாகப் பாடலாசிரியன் கையில் இக்கோலைக் கொடுத்து யாவரும் உள் புகுவர். அரசன் முதலியோர் தங்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தபின் நடனம் தொடங்கப்படும்.

இம் முறைகளில் சிலவற்றை நாம் இக்காலங்களிலும் நடம் அரங்கேறுகையில் காணுகின்றோம் அல்லவா!

மாதவி நடம் ஆடத் தொடங்கினாள். குழலும் யாழும் ஒலித்தன. மத்தளம் முழங்கிற்று. இனிமையான வாய்ப்பாட்டெழுந்தது. எல்லாம் சேர்ந்து ஒரே ஒலியாகத்தான் கேட்டன. பூங்கொம்பு ஒன்று வளைந்து வளைந்து ஒசிந்து நிமிர்ந்ததென்னும் படியாக மாதவி ஆடினாள். எப்பக்கம் அவள் திரும்பினும் எல்லோருடைய கண்களும் அப்பக்கமே திரும்பின. அவள் வளையும்போது யாவர் தலைகளும் வணங்கின. அவள் சுழலும்போது இளைஞர் உள்ளங்கள் சுழன்றன. அவள் உடல் குலுங்கும்போது அனைவர் உள்ளமுங் குலுங்கின. எல்லோரும் தம்மை மறந்த இன்ப நிலையில் ஆழ்ந்திருந்தனர். துள்ளியும், வளைந்தும், நீண்டும், குறுகியும், அடிதவறாமல் அன்று மாதவி ஆடிய அழகு அரசனையும் தலை அசைத்து மகிழச் செய்ய வல்லதாயிருந்தது. அசைந்து ஆடுவது மாதவியோ! அன்றி மலர்க் கொடியோ! என ஐயத்தில் மூழ்கிக் கிடந்த பலர் தம் நிலையை அடைய நீண்ட நாழிகை ஆயிற்று. எவ்விதமான குற்றமும் இன்றி ஆடலும் பாடலும் நிகழ்த்திய மாதவியின் திறங்கண்ட மன்னன் உள்ளம் மகிழ்ந்தான். அவளைப் பலவாறாகப் புகழ்ந்தது மன்றி எவரும் பெறுதற்கரிய தலைக்கோற் பட்டமும் தந்து சிறப்புகள் பலவும் அளித்தான். அப்பட்டத்திற்குரிய ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பசும் பொன்னையும், பச்சை மணிமாலை ஒன்றையும் பெற்று மகிழ்ந்தாள் மாதவி. இத்துடன் மன்றம் கலைந்தது.

"இலைப்பூங் கோதை இயல்பினின் வழாமைத்
தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒரு முறை யாகப் பெற்றனள்"

[கோதை: மாதவி. வழாமை: தவறாமல். எய்தி: அடைந்து. விதிமுறைக் கொள்கையின்: பெரியோரால் வகுக்கப்பட்ட முறையின்படி.]

விரைவில் **குன்றம்** வெளிவருகிறது!

மாத வெளியீடு.

ஆசிரியர். க. பரமசிவம்.

கவிதை, கதை, கட்டுரைகளுடன் சமுதாய சீர்திருத்த அரசியல் கருத்துக்கள் மிளிர வெளிவரும்.

விவரங்கட்கு: 'குன்றம்' பணிமனை.

திருச்செங்கோடு, சேலம் ஜில்லா.

சீன நாட்டுக் கதை.

# சாவா மருந்து

ம. இராதாகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.

[வாழ்நாள், ஆட்சி முறை, மத உரிமை-ஆகியவை குறித்து, சீனர்களின் உள்ளத்தில் தோன்றிய சில கருத்துக்களை-இவ்வழகிய கற்பனைச் சித்திரத்தில் காணலாம்.]

தங்க் பரம்பரையினர் சீனாவில் நெடுங்காலம் ஆண்டார்கள். அவர்களுள் மிகச் சிறந்த அரசன் சின்-ஆ என்பான். அவன் காலத்தில் நாடு வளமுற்றிருந்தது. அரசன் பகைவர்களை வென்று துணைவர்களைப் பெருக்கிக்கொண்டான். செல்வர்களிடம் பொருள் குவிந்தது. ஏழைகளின் நலங்களும் பெருகின. இவ்வளவோடு லாட்ஸ் என்ற தெய்வபக்தியற்ற கூட்டத்தாரை அடக்கி ஒடுக்கியதற்காக குடிகளும் அரசன்பால் மிகுந்த அன்பு பூண்டிருந்தனர்.

எல்லா நலங்களும் பெற்றும் அரசன் மனதில் மட்டும் ஒரு பெருங்குறை பலநாளாகவே இருந்துவந்தது. அதைப்பற்றி ஒருநாள் அவன் தன் சபையினரைக் நோக்கி என்னைப் போன்ற ஒரு சிறந்த அரசன் முன்பு இருந்ததில்லை என்று நீங்கள் கூறுவது உண்மையானல், எனக்குப் பின்னும் அப்படிப்பட்டவன் தோன்றப்போவதில்லை. அப்படியானல் நாட்டின்கதி பிற்காலத்தில் என்னவாகும்' என்று வினவினன்.

இக்கேள்விக்கு விடையளிக்க சபையில் எவரும் முன்வரவில்லை. பிரதம மந்திரி சட்ட மந்திரியை நோக்க, சட்டமந்திரி காவல் மந்திரியை நோக்க, காவல் மந்திரி படைத் தலைவனை நோக்கினன். அப்பொழுது; 'என் முறை வரும் பொழுது நான் கூறுவேன்' என்று படைத்தலைவனின் கீழுள்ள தளகர்த்தன் கூறியது அரசன் காதில் விழுந்தது.

உடனே அரசன் தளகர்த்தனை நோக்கி, 'நீ கூறியதின் பொருள் தான் என்ன?' என்று வினவினன்.

'பெருமை பொருந்திய அரசே! மனிதனுடைய ஆயுட்காலத்தை நீடிக்கச் செய்யும் அமுதபானத்தின் இரகசியத்தை அறிந்தவர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள். அப்பானத்தை உண்டால் நீங்கள் நெடுநாள் வாழ்ந்திருக்கலாம்' என்றான்.

'அப்படியானல் அவர்களை என் வரவழைக்கலாகாது' என்றான் அரசன்.

'அவர்களனைவரும் லாட்ஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பல்லாயிரம் பெயர்கள் உங்கள் ஆணையால் முன்னமே கழுவிலேற்றப்பட்டார்கள். மிகுந்துள்ளோரில் மிகச் சிலரே இந்த இரகசியத்தை அறிவார்கள்' என்று பதிலிறுத்தான் தளகர்த்தன்.

'நானும் சிந்தித்துப்பாரத்தேன். உண்மையில் அவர்களிடம் மந்திரிகள் கூறுவதைவிடச் சிறந்த நற்பண்புகள் இருக்கவேண்டும் என்பதை இப்போது உணருகிறேன்' என்றான் அரசன்.

‘அவர்கள் மிக நல்லவர்கள். அறியாமையினால் ஏதோ தவறு செய்தார்கள்’ என்றான் பிரதம மந்திரி.

‘அவர்கள் அப்பாவிகள்தான். சட்டசபையிலேயோ, நீதிமன்றத்திலேயோ வேண்டுமானால் அவர்களுக்குச் சிலபதவிகள் வழங்கலாம்’ என்றான் சட்டமந்திரி.

‘அவர்கள் வாழ்க்கையும் நம்முடயவை போன்றே இருக்கின்றது’ என்றான் காவல் மந்திரி.

‘படைத்தலைவன் நம்மிடம் உண்மையை மறைத்திருக்கிறான். முதலில் தளகர்த்தன் கூறியது எவ்வளவு தூரம் உண்மை என்று கண்டறிவோம். நமக்கு வேண்டிய விவரங்கள் யாவும் அடுத்த முறை அவை கூடுமுன் தளகர்த்தன் கொடுக்கவேண்டும்’ என்றான் அரசன்.

அன்றிரவே சிறைக்கூடத்திலிருந்த லாட்ஸ் கட்சியினரனைவரும் விடுதலை அடைந்தார்கள். தளகர்த்தன் நெடுநாட்களாகவே அரசவையில் மத சுதந்திரப் பிரகடனத்துக்காகப் போராடி வந்தான். அரசனுக்குப் புத்திகூற அவனுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அன்றிரவே அக்கூட்டத்தினரை அவன் தன்னிடம் வரவழைத்தான். ஆயுளை நீடிக்கச் செய்யும் அமுதபானத்தைப்பற்றி அவர்களிடம் வினவினான். ஒருவருக்காவது திருப்தியான விடையளிக்க முடியவில்லை. தங்கள் மதப் பெரியார்களுக்குமட்டும் அந்த பானத்தைப்பற்றித் தெரியும் என்றும் அத்தகைய பெரியார்கள் நிரந்தர நித்திரையில் ஆழ்ந்திருப்பதால் அவர்களிடம் உண்மையைக் கேட்டறிவது கடினமாகுமென்றும் கூறினார்கள். அம்மருந்தை அருந்துபவர்கள் பத்து ஆண்டும் அதற்கு மேலும் உறக்க மயக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள். அந்த உறக்கக் காலத்தில் மூச்சு முதலிய செயல்கள் இருந்தாலும் உடல் வளர்ச்சி கிடையாது. ஐம்பது ஆண்டுகள் கழித்து விழித்தெழுந்தாலும் உறக்கம் கொள்வதற்குமுன் இருந்த வயதே காணப்படும். ஆனால் மரண நிலை பிறகும் உண்டு. பானத்தை மறுபடியும் பருகினால் ஆயுள் வளரும். இத்தகைய மருந்தை அறிந்தவர்கள் நாட்டுக்கு வெளியே சென்றுவிட்டார்கள். அவர்களைக் காட்டுமிருகங்கள் ஒன்றுஞ் செய்வதில்லை.

அவர்களைத்தேடிக் கண்டுபிடிப்பது என்று ஏற்பாடாயிற்று. ஆனால் அதற்கு மற்றவர்களை அனுப்பத் தளகர்த்தனுக்கு விருப்பமில்லை. அப்பொழுது, நூற்றிருபது வயதுடைய லாட்ஸ் மதத்தினன் ஒருவன் இறக்குந் தருவாயிலிருப்பதாயும் அவன் தளகர்த்தனைக் காண வேண்டுமென்று கூறியதாயும் ஒரு சேவகன் வந்து கூறினான். தளகர்த்தன் அவன் இருக்கும் இடத்திற்கு உடனே விரைந்து சென்றான். அந்த மனிதன் தளகர்த்தனிடம் பின்வருமாறு கூறினான்.

‘மனிதவர்க்கத்துக்குப் பயன்படும் செய்திகளை இறப்பதற்குமுன் மற்றவர்க்குத் தெரிவித்துவிடவேண்டுமென்பது எங்கள் குரு லாட்சின் ஆணை. வாழ்நாளை நீடிக்கச்செய்யும் பானத்தைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. வேட்டையாடச் சென்ற என்னை ஒருநாள் புலியொன்று தன் குகைக்கு வாயில் கவ்விச்சென்றது. குகையில் நான் இரண்டு பெண்களைக் கண்டேன். அவர்களில் ஒருத்தி இளையவளாகவும் எழில் மிகுந்தவளாகவும் விளங்கினாள். மற்றொருத்தி நரைத்து மூத்தக் கிழவியாவாள். இளையவள் புலியை நோக்கி ஏதோ கூறினாள், அது என்னை விட்டுவிட்டது. நான் அவளுக்கு

வணக்கஞ் செலுத்தினேன். அவ்விருவரும் லாட்வின் மாணவிகள். வாழ்நாளை வளரச்செய்யும்பானத்தை அருந்தவே குகைக்கு வந்திருந்தார்கள். இளையவளுக்குத்தான் பானத்தின் உண்மை தெரியும் என்று அறிந்தேன். புலியோ என்னை வீட்டிற்குக் கொண்டுவந்துவிட்டது. அன்று முதல் நான் வேட்டையாடுவதை நிறுத்தி லாட்சின் கொள்கையைப் பின்பற்றினேன். அப் பெண்பிள்ளைகள் இன்னும் அதே குகையில் இருக்கின்றார்களோ என்னவோ, தெரியாது. குகை இருந்த திக்கைப்பற்றி மட்டும் கூறமுடியும், என்று கூறிக்கொண்டே குகையிருந்த திக்கைக் கையால் சுட்டிக் காட்டிய வண்ணம் உயிர்விட்டான்.

தளகர்த்தன் பல படைவீரர்களோடும், லாட்ஸ்மதத்தினரோடும் லாட்ஸ் மத உடையைத் தரித்துக்கொண்டு காட்டில் குகையிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான். மாலையில்தான் குகையை அவர்கள் அடைந்தார்கள். ஆட்களும் தளகர்த்தனும் மறைவிடங்களில் நன்றாகப் பதுங்கிக் கொண்டார்கள். குகை வாயிலில் ஒரு சிறுவனைக் கட்டி வைத்தார்கள். புலி வருவதை அதனால் தெரிந்துகொள்ளலாமென்பது அவர்கள் கருத்து. இரவு முழுவதும் காட்டுமிருகங்களின் ஒலத்தைக் கேட்டார்கள். விடிந்ததும் சிறுவனைக்கட்டிய இடத்தில் அவன் உயிரோடிருப்பதைக் கண்டு குகைக்குள் தைரியமாகச் சென்றார்கள். குகையில் புலியைக் காணவில்லை. ஆனால் தரையில் இரண்டுபெண்கள் மட்டும் தூக்கத்திலிருப்பதைக் கண்டார்கள். அவன் சொன்ன அடையாளங்கள் யாவும் அவர்களிடம் பொருந்தியிருந்தன. அவர்களின் உடை கழிந்த நூற்றாண்டினதாயிருந்தது—அவர்கள் நெடுங்காலம் உறக்கத்திலிருந்திருக்கவேண்டுமென்பதைக் காட்டிற்று. மூத்தவள் முகத்தில் சுருக்கங்கள் விழுந்து முதுபெருங் கிழவியாகவும், இளையவள் எழில்மிகுந்த பதினாறு வயது பருவமங்கையாகவும் காணப்பட்டனர். இருவரும் ஒருவரையொருவர் அணைத்தபடி நித்திரை புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நிதானமான மூச்சுடன் கனவிலே ஆழ்ந்திருப்பவர்கள்போல் தோன்றினர்.

இது மயக்கமாயிருக்குமோ? என்று கேட்டான் ஒருவன். தளகர்த்தனே முதியவள் மார்பில் தன் உடைவாளைப் பாய்ச்சினான். உடனே இரத்தம் பெருக்கெடுத்து அவள் இறந்தாள். அவளது உடலைக் கழுகுகளுக்கு இறையாக்கிவிட்டு உறக்கத்திலிருக்கும் இளையவளை ஒரு பல்லக்கில் ஏற்றிக்கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தனர். இதைக்கேட்ட அரசிக்குக் கோபம் பொங்கிற்று.

'மதியிழந்தமன்னனே! பானத்தை அருந்தி நரைதிரைகளுடன் நீண்ட நாள் வாழ்ந்திருக்க நான் விரும்பவில்லை. எனக்கு அப்பானம் வேண்டாம்' என்று கோபத்துடன் கூறிவிட்டுத் தூக்கிட்டுக்கொண்டாள். அரச வழக்கத்தை யொட்டி அரசனது மற்ற மனைவியரும் தங்கள் உயிரை அதே முறையில் மாய்த்துக் கொண்டார்கள்.

அரசகுமாரனுக்கு இச்செய்தி எட்டிற்று. அவன் அரசனை அடைந்து, 'சிற்றின்பப் பிரியனான அரசனே! மதியின்மையால் சொந்த மனைவிக்கும் நீ கூற்றானாய். உன் மையலில் என்னையுங் கொல்ல முயற்சிப்பாய். ஆனால் அதற்கு முன்னால் நானே உன்னையும் அந்நங்கையையும் கொன்று விடுகிறேன்' என்றுகூறி அரசன்மீது பாய்ந்தான்.

காவலர்கள் அவனைக் கட்டிப் பிடித்து அரசன் கட்டளைக்கிணங்கக்

கழுவிலேற்றிவிட்டார்கள். அவனுடன் பிறந்தவர்களுக்கும் அதே முடிவுதான்.

அரசனோ தன் கடமைகளை அறவே மறந்து, நங்கையைப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே பொழுதைக் கழித்தான். இவ்வாறாகப் பல ஆண்டுகள் கழியவும் அரசன் தன் மரணம் விரைவில் இருப்பதாக உணர்ந்தான். நங்கை மீதிருந்த மையல் சிறிதளவு குறைந்ததென்றாலும் பானத்தின் மீதிருந்த அவா குறையவில்லை. நங்கையின் உறக்கமும் கலைவதாகத் தோன்றவில்லை. தனக்கிருந்த ஆத்திரத்தில் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அரசன். அவள் விழித்தெழுந்து பானத்தைப் பற்றிக்கூறுவாள் என்பது அவன் எண்ணம்.

பானத்தை அருந்தி தான் நித்திரையிலிருக்கும் பொழுது ஆகவேண்டிய நாட்டு நிர்வாகங்களுக்குத் திட்டமிடலானான் அரசன். ஆளும் அடையாளங்களுடன் தன்னை அரியணையில் அமரவைத்து அரசவையை நடத்தும்படிக் கூறினான். அனைவரும் அவன் உருவத்திற்கு மரியாதை செய்ய வேண்டுமென்றும் அவன் உடலுக்குத் தீங்கிழைக்க எண்ணுபவர்களுக்கு மரணதண்டனை அளிக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்தான். உண்மையில் அவையினருக்கு அரசன்மீது வெறுப்பே. அவன் உறக்கத்தில் ஆழும் சமயம்பார்த்து அவனைக் கொலைசெய்துவிட்டு எதிரிகளுடன்கூடி ஆட்சியைக் கைப்பற்ற அவர்கள் சூழ்ச்சி செய்தார்கள்.

அரசன் மிகவும் வலியற்றவனானான். அவன் கண் முன்னால் பல பயங்கரக் காட்சிகள் தோன்றின- பைசாசங்களும், பூதங்களும் அவனைப் பிய்த்துத்தின்ன வந்ததாகத் தோன்றிற்று. அவற்றில் ஒன்று, 'அரசனே, நீ இன்னும் பத்துநிமிடங்களில் இறந்துவிடுவாய்' என்று கூறிற்று.

அரசன் நடுக்கங்கொண்டான். வேகமாக அந்த நங்கை படுத்திருக்கும் கட்டிலை அடைந்து உரத்த குரலில் 'எழுந்திரு, எழுந்திரு, எழுந்து என்னைக்காப்பாற்று' என்று கூவினான். அந்நங்கையும் அப்பொழுது தான் தூக்கத்திலிருந்து விழித்தெழுபவள் போல் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தாள். அவள் அப்பொழுது மிகுந்த அழகுடன் காணப்பட்டாள். அரசன் அவற்றையெல்லாம் கவனிக்கவில்லை. பைத்தியம் பிடித்தவன்போல் அவளை நெருங்கி 'கொடு, கொடு, பானத்தைக் கொடு, சீக்கிரம், இன்றேல் நான் இறந்துவிடுவேன்,' என்று கதறினான்.

'பானத்தின் இரகசியம் என் மகளுக்குத்தான் தெரியும்,' என்று பதிலளித்தாள்.

'உன் மகள் யார்? அவள் எங்கே? என்றான் அரசன்.

'குகையில் என் பக்கத்தில் படுத்திருந்தவள்தான் என்மகள்' என்றாள்.

'கிழவியா, உன்னுடைய மகள்?' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

'ஆம், பதினாறு வயதில் நான் அவளைப் பெற்றெடுத்தேன். எழுபது ஆண்டுகள் தூக்கத்திலிருந்தேன். விழித்தெழுந்துபார்த்தபோது அவள் நரைத்த கிழவியாகக் காணப்பட்டாள். நானோ தூக்கத்திற்குமுன் இருந்ததுபோலவே ஆரோக்யத்துடனும் இளமையுடனும் இருக்கிறேன். பானத்தின் இரகசியத்தை உணர்ந்தவள் அவளே' என்று கூறினாள்.

அப்படியானால், அவளும் இறந்துவிட்டாள். அதற்குக் காரணம் தளகர்த்தன். அவனைக் கழுவிலேற்ற வேண்டுமென்றான் அரசன்.

# பண்டைத் தமிழகத்தில் தாலி?

**எழிலன்**

நாகரிக மங்கையர் நால்வர் கூடும் இடங்களில், நங்கையர் கழகங்களில், சீர்திருத்தத் திருமணங்களில், பொது மேடைகளில், ஏன், தனிப்பட்ட இருவர் உரையாடலில் கூட தாலியின் வேண்டாமை பற்றிப் பேசப்பட்டு வரும் இந்நாளில், தாலியின் பழமை பற்றிய ஆராய்ச்சி எற்றுக்கு என்னும் ஐயம் சிலர்க்கு எழக்கூடும். வேண்டிய ஒன்றுதானா? என்ற வினாவும் சிலரிடைத் தோன்றும். நாட்டில் நடமாடும் ஓர் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியைப் பற்றி, அடிப்படையிலிருந்து அறிந்து கொள்வதில் தவறு ஏதும் இராதென்றே எண்ணுகின்றேன்.

பண்டை நாளில் தாலி இருந்தது, ஆதலால் தாலி கட்டியே தீரவேண்டும் என்றோ, அந்நாளில் தாலி இல்லை, எனவே இன்று கட்டுவதும் வீண் என்றோ வலியுறுத்திக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. அம்முடிவைத் தோழர்களுக்கே விட்டு விடுகிறேன்.

"நினைப்பு நிலையைப் பொறுத்தது" என்பர் அறிஞர் அண்ணா அவர்கள்.

---

'மக்கள் அவனை முன்னமேயே பிடித்துக் கொன்றுவிட்டார்கள். இப்பொழுது உன்னை நோக்கிவருகிறார்கள். உனக்கும் அதேமுடிவுதான்' என்றாள் அவள்.

அவள் கூறி முடிக்குமுன் அறையின் கதவு திறக்கப்பட்டது. ஒரு பெரிய மக்கள்கூட்டம், உள்ளே நுழைந்தது. அக்கூட்டத்தினருள் ஒருவன் அரசன்முன்வந்து, 'இப்பொழுது பெற்றுள்ள வாழ்நாளை விரும்பாமல் புதிய வாழ்நாளை விரும்பும் அரசனே! இதோ இந்தப்பரிசை பெற்றுக்கொள்' என்று மார்பில் கத்தியால் ஓங்கிக் குத்திவிட்டான். நடைப்பிணமாக வாழ்ந்த அரசன் குழிப்பிணமானான்.

'கொல்லுங்கள், கொல்லுங்கள், அந்த சூனியக்காரியைக் கொல்லுங்கள்' என்று ஒரே கூக்குரல் எழுந்தது.

அந்நங்கை அவர்களை ஒருமுறை கூர்த்துப் பார்த்தாள். உடனே அவர்கள் பணிவாக, 'நீ எங்கள் அரசியாய் விளங்கு' என்று வேண்டினார்கள்.

'அப்படியானால் நூறு ஆண்டுகள் நான் அரசியாக இருப்பேன். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்' என்று அவர்களை நோக்கிக் கட்டளையிட்டாள். 'அப்படியே,' என்று பலகுரல்கள் எழுந்தன.

அவள் அரசியாக விளங்கி நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினாள். அவள் காலத்தில் நாட்டின் செல்வம் வளர்ந்தது. எந்தக் கொள்கையினருக்கும், அவரவரது கொள்கையைக்கூற, மதத்தைப் பின்பற்ற உரிமை ஏற்பட்டது. அடக்குமுறைக் கொடுமை அடியோடு ஒழிந்தது.

"தேவையற்றது, பிறர் சிரிக்கத் தக்கது எனக் கருதும் சில மூடப் பழக்க வழக்கங்கட்கு நாம் முற்றுப் புள்ளி வைப்பதைப் போன்றே. அடிமையின் அறிகுறியாகக் கருதப்படும் தாலியையும் (கட்டப் பட்டிருந்தால் கழுத்தில் இருந்துகூட) அகற்ற வேண்டும்" என்பர் ஒரு சாரார். "பழைய பழக்கத்தை மாற்றுவது தவறு! அன்றியும், மணமான ஓர் பெண்ணை மற்றவனுக்கு உரியவள் என்று அறிவது எப்படி? தாலியல்லவோ இருவர் உள்ளங்களையும் இணைக்கும் முடிகயிறு" என வாதிடுவர் மற்றொரு சாரார்.

எது எவ்வாறாயினும் பழமை நிகழ்ச்சிகள் பலவற்றை நாம் கைவிடலாகாது என விரும்பும் (வயதில்) பெரியோர்கள் கூட பழமையில் தாலி இருந்ததா என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

தமிழன் வாழ்ந்தான் அந்த நாளில்; மறுப்பவரில்லை இன்றும். பொய்யோ, புனைந்துரையோ, புராணமோ அல்ல இது; வரலாறு வரைந்து காட்டும் சித்திரம்!

வாழ்ந்தான் என்றால், வகையும், வளமும் அற்ற மானம் இழந்த, வரண்ட வாழ்க்கையல்ல அவன் வாழ்ந்தது. ஆடுமாடுகளுக்குக் கூட புல் கிடையாமல் ஆசியாக் கண்டத்தைச் சுற்றி அலையவில்லை அவன்.

வானிடை மிதந்திடும் தென்றலில், மணிமாடங்கள் கூடங்கள் மீதினில், தேனிடை ஊறிய செம்பவள இதழ்ச் சேயிழையாருடன் உலவி, செல்வப் பெருக்கினில், உரிமையோடு வாழ்ந்தான்.

"அவன் வாழ்வில் கண்டவை காதல், வீரம் இரண்டுமே." வீரத்தின் விளைவு அவனுக்கு இன்பத்தின் எல்லையாகவே இருந்தது. எனவே இணையற்ற இன்பவாழ்வு நடத்திய அவனைப் பற்றிக் கூறும் நூல்களிலும் பெரும் பகுதி அகப்பொருள் பற்றியே அமைவதாயிற்று!

பெண்ணைத் தாழ்வாக எண்ணும் பிழைமதி அவன் உள்ளத்தில் பிறந்ததுகூட இல்லை. ஒத்த நிலையில் தன் மற்றொரு கண்ணாகவே பெண்மையை அவன் போற்றினான். அதன் விளைவுதான் மனங்கலந்த, மாசற்ற, காதல் மணங்கள்.

இரு உள்ளங்கள் ஒன்றுபட்ட நிலையில் அவர்கட்கு எத்தகைய சடங்குகளும் தேவைப் படவில்லை. "கண்ணைப் புகைக்கும் நெருப்பும், காதைத் துளைக்கும் மந்திரங்களும், கருத்தைக் கெடுக்கும் கண்மூடிச் சடங்குகளும், காசைப் பறிக்கும் பார்ப்பனரும் அவர்கள் கற்பனையிலும் எட்டாத உருவங்கள்." "தாலிக்கயிறு என்ற சொல்லுக்குப் பொருள்கூடத் தெரியாது அந்த நாட்களில்."

தீவளர்க்கும் முறைகளும், புரோகிதர் செய்யும் பொருத்த மற்ற சடங்குகளும், பிற்காலத்தில் அண்டிப் பிழைக்க வந்த ஒரு சிலரால், தம் சொந்த நலம் கருதி மெல்ல மெல்ல, தமிழரிடையே புகுத்தப் பட்டவை என்பது அறிஞர் பலரும் ஒப்ப முடிந்த தொன்று. தாலியும் அவ்வழியில் நுழைந்தது தான்.

தமிழில் இப்போது சங்க இலக்கியங்கள் என்று கூறப்படுகின்ற எட்டுத் தொகை, பத்துப் பாட்டு முதலியன, இருக்கின்ற இலக்கியங்களுக் குள்ளே பழமை வாய்ந்தவை. இவையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டை ஒட்டியனவே என்று கருதப்படுகின்றன. தமிழனின் மிக்கபழமையை அதாவது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் உள்ள நிலைமைகளைச் சரிவர உணர்வதற் கேற்ற இலக்கியங்கள் தமிழில் கிடைக்கவில்லை. தொல்காப்பியம்என்ற இலக்கண நூல்கூட இந்நூல்களின் காலத்திற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகள் முன்பே எழுந்த தெனக் கருதப்படுகின்றது. ஆயினும் பிற்பட்ட இந்நூல்களில் கூடத் தாலியை நாம் காணமுடியவில்லை.

இவற்றில் பல இடங்களில் தாலி என்னும் சொல் வழங்கியுள்ளது. ஆனால், ''கணவன், காதலியின் கழுத்திலே கட்டும் கயிறு'' என்றபொருளில் அல்ல! ''சிறு குழந்தைகட்கு அவை பிறந்ததும் குறிப்பிட்ட ஓர்நாளில் பெற்றோர்களால் அணிவிக்கப்படும் ஓர் அணி'' என்ற பொருளில்தான் நாம் இதைக் காணுகின்றோம்.

இச் செய்தி பலர்க்கு வியப்பைத்தரலாம். ஆம்! குழந்தைகளுக்கு நோய் முதலியன வாராமல் இருப்பதற்காக நாம் இப்போதும், எருக்க நார்க்கயிறு போன்ற வற்றை, அவை பிறந்ததும் கட்டுகின்றோம் அல்லவா! அதுபோலக் கட்டப்பட்டது பழங்காலத்திலும் ஓர் தாலி. இது பிற்காலத்தில் மதத் தொடர்பு பட்டு ''ஐம்படைத் தாலி'' என்று வழங்கியது.

''தாலி ஐம்படைத் தழுவும் மார்பிடை'' (கம்பர்)
''ஐம்படை மார்பில் காணேன்'' (திருவிளையாடல்)
''ஐம்படைச் சதங்கை சாத்தி'' (சேக்கிழார்)

என இது பிற்கால இலக்கியங்களில் இடம் பெற்றது. குழந்தை ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இத் தாலி அணிவிக்கப்பட்டது. எனவே இக் குழந்தைத் தாலிதான் பல இடங்களில் சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்றது.

இனிக் குழந்தைகட்குக் கட்டும் முறை மட்டுமன்றி கணவன் மனைவிக்கும் கயிறு கட்டும் வழக்கம் எவ்வாறு தோன்றிய தென்பதை நோக்குவோம்.

பண்டைத் தமிழர் வீரவாழ்வினர்; அஞ்சா நெஞ்சினர்; போரென்றால் வீங்கும் பொருப்பன்ன தோள்களை உடையர். உடற் கட்டுவாய்ந்தவர். அக்காலங்களில் காடுகள் மிகுந்து எங்கும் மண்டிக் கிடந்தன. மக்கள் அவற்றில் செல்லும்போது, புலி, சிங்கம், யானை முதலிய கொடிய விலங்குகளிடம் அடிக்கடிப் போரிட்டுத் தம்மைக் காத்துக் கொள்ளும் நிலையில் இருந்தனர். எனவே தமிழ் மறவர் பலர், சமயம் நேரும் போதெல்லாம் தம்மை எதிர்த்த புலி முதலியவற்றை அஞ்சாது எதிர்க்கத் தயங்குவதில்லை. எதிர்த்துத் தம்மால் வீழ்த்தப்பட்ட புலி முதலியவற்றின் பற்களைக் கயிற்றில் கோத்து, வீரத்தின் விளக்கமாகவும் அன்பின் பரிசாகவும் தம் ஆருயிர்க்

காதலியர்க்கு அணிவித்து வந்தனர். பொன் முதலியவற்றில் இப் பல் இழைக்கப்பட்டு குழந்தை கட்டும் அணியப்பட்டு வந்தது.

இந்நிகழ்ச்சி நாளடைவில் ஆரியர் தம் நலத்திற் கேற்ப வகுத்த சடங்குகளால் மாற்றம் அடைந்து, புலியைக் காணுதவர்களேகூட மனைவிக்குக் கட்டியேதீரவேண்டிய ஓர் கயிருக உருவமெடுத்து விட்டது.

ஆரியர் தலையீடின்றி நிகழ்ந்த பழைய திருமணங்களில் இது புகுத்தப் படவில்லை. அன்பால் பிணைக்கப் படவேண்டிய இரு உள்ளங்களேயும் வெறுங் கயிறுகொண்டு பிணைக்க முயன்ற ஆரியத்தின் அறிவே அறிவு!

இதோ-தாலியைக் குறித்த செய்திகள்.

| | |
|---|---|
| "தாலிகளைந் தன்றும் இலனே" | புறநானூறு-77. |
| "புலிப்பல்தாலி புன்றலைச் சிறுர்" | புறநானூறு-374. |
| "புலிப்பல் கோத்த புலம்புமணித்தாலி" | அகநானூறு-7. |
| "புலிப்பல்தாலிப் புதல்வர்" | அகநானூறு. |

இன்னும் பல உள்ளன; ஏதோ சில காட்டினேம் சிந்தனைக்காக.

இவ்வாறுன ஓர் வகைத் தாலி இருந்தது உண்மை; ஆனுல் மண நிகழ்ச்சிகளில் தாலி கட்டப்பட்ட வில்லை என்பது இதனுல் எவ்வாறு பெறப் படும் எனச் சிலர் வினவுவர். ஆம்! அந்த நிலையிலும் நின்று ஆராயத்தான் வேண்டும்.

சங்க இலக்கியங்களில் எத்தனையோ திருமண நிகழ்ச்சிகள் பற்றிக் கூறும் பாடல்கள் உள்ளன. அவ்விடங்களில் எங்கும் தாலியைப் பற்றிய பேச்சே கிடையாது. தாலி கட்டும் வழக்கம் இருந்திருக்கு மாயின் புலவர்கள் அவற்றைப் பற்றிக் கூருமல் எவ்வாறு இருக்க முடியும். இருந்து கூருமலிருந்தால் "கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை" போலல்லவா. முடியும். ஆனுல் எந்த இடத்திலும் தாலி கட்டப் பட்டதாகத் தெளிவாகக் கூறப்பட வில்லை. தாலி பிற்காலத்தில் எவ்வளவு முக்கியமாக மாறி விட்டதென்பதை நாம் கூறவேண்டியதில்லை. மேனுட்டு மின்னற் கொடிகள் பலர் தம் நாயிடம் காட்டும் அன்பில் ஓர் பாகம்கூட, தம் நாயகரிடம் காட்டுவதில்லையாம்; அதுபோலத் தற்காலத் தமிழ் மங்கையர் பலர் தாலியிடம் காட்டும் அன்பில் நாலில் ஒரு பங்கைக் கூடத் தம் கணவரிடம் காட்டுவதில்லையல்லவா! இவ்வளவு முதன்மை வாய்ந்த தாலி அக்காலத்தில் வழக்கில் இருந்திருந்தால் எவ்வாறு புலவர்களால் புறக்கணிக்கப் பட்டிருக்கும்?

தமிழ்ப் புலவர் பெருமக்களைக் கேளுங்கள்! அகம் - புறம் போன்ற நூல்களில் மண நிகழ்ச்சிகளில் தாலி கட்டப் பட்டனவாக ஏதாவது இடங்கள் உள்ளனவா என்று.

"நீங்கள் குறிப்பிடும் இடங்களில் வரவில்லை; ஆனுல் பிறவிடங்களில் ஏதோ தாலியைப் பற்றியது போன்ற குறிப்புக்கள் இலை மறை காய் போல ஆங்காங்குக்காணக் கிடைக்கின்றன" என்று அவர்கள் ஏதேனும் கூறி மழுப்

பக் கூடும். எனினும், என் வெளிப்படையாகத் தெளிவாக, முதன்மை வாய்ந்ததாகக் கூறப்படவில்லை என்று, கேளுங்கள் ஐயம் தெளிய.

திருமணத்தைப் பற்றிப் பழைய நூல்கள் கூறும் இடங்கள் பலவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டு இடங்களைப் பார்ப்போம். இதோ ஓர் காட்சி!

உழுத்தம் பருப்புடன் நெய் கலந்து சமைக்கப் பட்ட பொங்கலின் மணம் கமகமவென்று வீசுகிறது. அதைத் தொடர்ந்து ஏதோ பெரிய அலைகடல் போன்ற ஓர் ஒலி கேட்கின்றது. ஆம்! பெரிய பந்தி விருந்து நடக்கின்றது.

"திருமண விருந்துதான்!"

"எவ்வளவோ வகை வகையான உணவுகள் விருந்தில்,"

"காலை முதல் மாலைவரை, இரவு முழுவதுங் கூட இடைவிடாமல் அவ்விருந்து நடந்து கொண்டே இருக்கின்றது போலும்?"

விருந்தை விட்டு நாம் வெளியில் வந்தால், ஓர் அழகான பந்தல்! பந்தலின் அடியில் புதுமணல் பரப்பப் பட்டிருக்கிறது. வரிசை வரிசையாக நாட்டப்பட்ட கால்களிலும், பந்தலிலும் முத்து மாலைகளும், மலர் மாலைகளும் தொங்குகின்றன. மணி விளக்குகள் அழகாக எரிந்து கொண்டிருக்கின்றன. அப்பந்தல் போடப் பட்டுள்ள வீட்டின் உட்புற மெங்கும் ஒரே பகலாகத் தெரிகின்றது அவ்விடியல் இரவிலும்.

அன்று பெரியோர்கள் வகுத்த குற்ற மற்ற நன்னாள்! திங்கள் உரோகிணியைச் சேர்ந்த திருநாள் அது!

இருள் பலபல வென்று விடிகின்ற நேரம்; அணியணியாக ஓர் மகளிர் கூட்டம் வருகின்றது. தலையில் நீர்நிறை குடங்களையும், பல்வேறு மங்கலப் பொருள்களையும் தாங்கி வருகின்றது அக்குழு. காலத்தாலும் சீலத்தாலும் மூத்த கற்புடைய மகளிர் பலர் அதில் காணப்படுகின்றனர். இவர்கள் மணவினையின் முதன்மையான நிகழ்ச்சியைச் செய்விக்க முன்வந்திருப்பவர்கள் போலும்!

இவர்களில் நால்வர் முன்வருகின்றனர். இந்நால்வரும் குழந்தைப் பேற்றைக் குறைவில்லாமல் பெற்று காதலனுடன் கலந்து வாழ்க்கை நடத்துகின்ற மங்கல மகளிர் ஆவர்.

இவர்கள் கையால் மணவினை நடப்பது, மனதிற்கு மகிழ்ச்சியும், அமைதியும் அளிக்கக் கூடியதல்லவா!

ஆ! அதோ! அவர்கள் மணமகளை வாழ்த்துகின்றனர்!

"கற்பினின்றும் தவறாமல் நற்பேறு பலவும் பெற்று கணவனுடன் கலந்து வாழ்ந்து, களி மகிழ்வு கொள்ளுக!"

இச்சொற்களில்தான் எவ்வளவு பொருள் நிறைந்து கிடக்கின்றது! உதட்டினால் கூறப்பட்டன அல்ல இவை; உள்ளத்தினால் உயிரோடு கலந்த உணர்ச்சியினால் கூறப்பட்டவை. இது போன்ற வாழ்த்துகட் கல்லவா பொருள் இருக்க முடியும்.

ஏதோ பொருள் விளங்காதபடி, வாயில் ஒன்றுகூறி, மனதில் ஒன்று வைத்து வாழைக் காய்க்கும், வரும்படிக் காசுக்கும் வழிகோலிக் கொள்கின்ற ஆரியர் நிகழ்த்தும் மணத்திற்கும் இதற்குந்தான் எவ்வளவு வேறுபாடு!

மலர்களையும் நெல்லையும் கலந்து தூவி மணப் பெண்ணை நீராட்டுகின்றனர். இவ்வாறுன சில நிகழ்ச்சிகளோடு மணம் முடிகின்றது. பெரியோர் ஆசி கூறுகின்றனர். படியுங்கள் கீழ்வரும் பாடலை.

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை.
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரை கால்
தண்பெரும் பந்தர், தருமணல் ஞெமிரி
மனைவிளக்கு உறுத்து மாலை தொடரிக்
கனைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடுஇல் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர,
புதல்வற் பயந்த திதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகஎன
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்லிரும் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை"

[மிதவை : பொங்கல். அமலை : ஓசை. ஞெமிரி : பரப்பி. உறுத்து : ஏற்றிவைத்து. கவின் : அழகு. தலைவந்தென : வந்து பொருந்தியதாக: மண்டை : ஒருவகைப் பாத்திரம். பொதுசெய் : மணம் செய்யும். கம்பலை : ஓசை. திதலை : தேமல். வால்இழை : ஒளிபொருந்திய அணிகலன். வழாஅ : தவறாது. பெற்றோன் பெட்கும் : கணவன் விரும்புகின்ற. கதுப்பு : கூந்தல். வதுவை நன்மணம் : திருமணம்.]

இதுபோன்ற மணம் எத்தனையோ இடங்களில் உள்ளது. எங்கே அவற்றில் தாலி! ஏன் இல்லை? இருந்தால்தானே கூறியிருக்க முடியும்.

"இல்லாததை இருப்பதாகப் பாவித்துக் கூறுவதற்குத் தமிழ்ப் புலவர்கள் என்ன சட்டசபை அமைச்சர்களாகவா இருந்தனர்?

சிலப்பதிகார காலத்திலும் கூட தாலி பெரு வழக்கில் இல்லை. சிலப்பதிகார காலத்தை ஓர் இடைப்பட்ட காலம் என்றே கொள்வர் அறிஞர் அ. சி. நாதன். நஞ்சுபோல சிறிது சிறிதாக உள்ளுக்குள் பரவிய ஆரியப்

பண்பாட்டிற்கு இடங்கொடாமல் பல விடங்களில் தமிழர் எதிர்த்து நின்ற காலம் அது. எனினும், தங்களைப் "பூதேவர்" என்ற முறையில் அறிமுகம் செய்து கொண்டு அவரை மயக்கித் தம் வயப் படுத்திய அந்தணர் சிறிது சிறிதாக உயர்வு பெற்று வந்ததும் அக்காலத்தில்தான்.

ஆரியரின் வெள்ளையில் மயங்கிய நொள்ளையர் பலர் எங்கோ ஒவ்வோரிடங்களில் அவர் தம் நாகரிகத்தை ஒப்புக்கொண்டு ஏற்றும் வந்தனர். ஆகவே ஆரிய அநாகரிகம் கலந்தும், கலவாமலும் நின்ற ஓர் இடைப்பட்ட காலம் சிலப்பதிகார காலம் என்னலாம். எனினும் தண்டமிழ் நாட்டு வேந்தரும், புலவரும், துறவியும் ஆகிய இளங்கோ வடிகள் தமிழ்ப் பண்பாட்டை ஒட்டியே கோவலனது திருமணத்தில் தாலியை அறவே விலக்கி மற்றைய நிகழ்ச்சிகளைக் கூறினார்.

மணம் நடக்கும்போது மகளிர்க்கு அழகைத்தரும் சில மங்கல அணிகளை ஊர்வலமாகக் கொண்டுசெல்லுதல் பண்டைய வழக்கம். அணி என்னும் சொல் பலவகைக் கலன் (நகை)களையும் குறிக்குமேயன்றி, சிறப்பாகத் தாலியை ஒருபோதும் குறிக்காது. இன்னும் தென்னாட்டில் வணிகர் வீட்டுத் திருமணங்களில் மங்கலமான ஓர் அணி ஊர்வலமாக எடுத்துச்செல்லப் படுவதை அறியலாம்.

இம்முறையை ஒட்டியே கோவலன் மணத்திலும் "அகலுள் மங்கல அணி எழுந்தது" என இளங்கோ கூறிச் சென்றார். சிலப்பதிகாரத்திற்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லாரும் இவ்விடத்தில் "மங்கலஅணி" என்றே பொதுப்படக் கூறிச்சென்றாரேயன்றிக் குறிப்பிட்டுத் தாலி எனக் கூறாமை நோக்கத்தக்கது.

கணவன் இறந்தால் மகளிர் இம்மங்கல அணிகலன்களைக் களைந்துவிடுவர். மங்கலத்தின் அறிகுறியாகக் கருதப்பட்டுவந்த இவ்வணிகள் மங்கலம் ஒழிந்தபின் கழற்றப்படுதல் இயற்கை.

இச்செய்தி புறநானூறு முதலிய நூல்களால் உணர்த்தப்படுகின்றது. "வாலிழை கழித்த மகளிர்" என்பதுபோல வரும் இடங்களை நோக்குக.

இனி இளங்கோ, கண்ணகியின் வருத்த நிலையைக் கூறுமிடத்தும் அவள் கோவலனைப் பிரிந்திருந்த நிலையில் இவ்வணிகளை வெறுத்தொதுக்கினதாகவே கூறுகின்றார். கூந்தலில் மலர் அணிந்திலள்; குங்குமம் நெற்றியில் தீட்டிலள்; சிவந்த கால்களில் சிலம்பும் பூண்டிலள் என்றெல்லாம் பல திறத்தில் அவளின் துன்பநிலைகளைக் காட்டிக்கொண்டேவரும் புலவர் "மங்கல அணியில் பிறிதணி மகிழாள்" எனக் குறிப்பிடுகின்றார். இவ்விடத்தில் "மங்கலஅணி" எனவரும் தொடர் தாலியைக் குறிப்பதாகும் எனச் சிலர் கருதுவர். அது தவறுடைத்து என்பதை அவ்வடிக்கு அரும்பத உரையாசிரியர் எழுதியுள்ள உரை கூறுகின்றது. "மங்கலஅணி: இயற்கையழகு" என்றே அவ்விடத்திலும் பொருள் எழுதப்பட்டமை கருதத்தக்கதுதானே! இயற்கையான உடல் அழகையன்றி எவ்வித செயற்கையணிகளையும், அத்துன்ப நிலையில் கண்ணகி அணியக் கருதிலள் என்பது எவ்வளவு பொருத்தமான உறையாக விளங்குகின்றது!

இதுபோன்று பலவிடங்களைக் கூறலாம். அவற்றிற்கெல்லாம இச்சிறு கட்டுரை இடந்தாராதாதலின் ஐயத்திற்கிடமான ஒன்றிரண்டுமட்டும் கூறி முடிப்போம்.பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய "நெடுநல்வாடை"யில்

" ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்
பின்அமை நெடுவீழ் தாழ"

என ஓர் பகுதி காணப்படுகின்றது. குறிப்பிட்டநாளில் வருவதாகச் சொல்லிப் பிரிந்துசென்ற காதலர்கள் அந்நாளில் வந்து சேரவில்லை. வரமுடியவில்லை சென்றவேலை முடியாத காரணத்தால்.

குறித்தநேரம் கடந்துவிட்டால் ஒவ்வொரு நாழிகையும் ஒவ்வொரு ஊழிகளாகத் தலைவியர்க்குத் தோன்றும்.

இவ்வாறு துன்பத்தில் மூழ்கிக்கிடக்கும் ஓர் தலைவியை நமக்குக் காட்டுகின்றார் ஆசிரியர். படிப்படியாக அவளின் துன்பமிகுதி கூறப்படுகின்றது. எவ்வகை அணிகளும் அணியாமல், கூந்தலையும் கோதிமுடிக்காமல், குலைந்து கிடக்கும்படியாகத் தானும் துவண்டுகிடக்கும் தலைவியின் நிலை கூறப்படுகின்றது.

"முத்து மாலைகள் புரளுகின்ற மார்பில் இப்போது வெறுங்கூந்தல் குலைந்து புரளுகின்றதாம்." இக்கருத்தைத்தான் மேல் அடிகள் காட்டுகின்றன.

இதையறியாத அந்நூலின் உரையாசிரியர் 'நச்சினார்க்கினியர்' "பின் அமை நெடுவீழ்" என்பதற்குப் பின்னுதலமைந்த நீண்டதாலி எனப்பொருள் எழுதினார்.

இது மிகவும் பிற்பட்ட இவர்காலத்திற்கு வேண்டுமானால் பொருந்தும். தமிழ்ப்பண்பாடு மாறாத சங்கத் தமிழகத்திற்குப் பொருந்துமாறு எங்ஙனம்? "வீழ்" என்பதற்கு விழுந்துகிடக்கின்ற காரணத்தால், 'தாலி' எனவலிந்து பொருள்கொண்டதைப் போல இவர் செய்த தவறுகள் பல. இவருக்கு முன்பு ஓர் உரை இந்நூலுக்கு இருந்ததாக இவரே குறிப்பிடுகின்றார். நாம் ஒரு நூலின் உண்மைப்பொருளை அறியவேண்டுமானால் அந்நூல் எழுந்த காலத்திற்கு எவ்வளவு அண்மையில் உரை எழுதப்பட்டுள்ளதோ அதைப் பார்த்துத்தெளியவேண்டும். ஏனெனில் நாளடைவில் வழக்குகள் மாற மாறக் கருத்தும் மாறும்.எடுத்துக் காட்டாக இதையேபார்ப்போம். நச்சினார்க்கினியர் காலத்தில் 'தாலி' எனச் சுட்டுகின்ற அதே "வீழ்" என்ற சொல்லை "கூந்தல்" (மயிர்) என்று கூறுகின்றார் பழைய உரைகாரர். காரணம் நச்சினார்க்கினியர் காலத்தில் 'தாலி' பெருவழக்கில் வந்துவிட்டது. பழைய உரையாசிரியர் காலத்தில் அவ்வாறு இல்லை என்பதே.

"முத்து மாலைகள் புரண்ட மார்பில் துன்பங் காரணமாக எவ்வணியும் அணியப்படவில்லை, கூந்தல் மட்டும் புரண்டு கிடந்தது" எனக் கூறுவது நேரான முறையாகத்தானே காணப்படுகின்றது!

ஆகவே இதுகாறும் கூறியவற்றால், எவ்வகையால் நோக்கினும், தாலி கட்டும் பழக்கம் பிற்காலத்தில் வந்ததே என்பது துணிபு. அறிஞர் பலரும் இதை ஒப்புவர் ஆராய்ச்சி காரணமாக. பழமை நாடுவார் எண்ணிப்பார்த்துப் பயன் கொள்வாராக.

# முடிவுண்டா?

"கருணை"

தமிழன் என்றொரு இனமுண்டா?
    தனியே அதற்கொரு குணமுண்டா?
தமிழிற் பேசுவோர் யாவருமா?
    தமிழ்நாட் டுள்ளவர் அனைவருமா?

இந்தி மொழியினைப் பேணுபவர்,
    எதிலும் வடமொழி காணுபவர்,
சொந்தம் தமிழென நாணுபவர்,
    சூத்திரன் மொழியெனக் கோணுபவ

இத்தனை பேரும் இந்நாளில்,
    "யாமும் தமிழர்; பன்னாளாய்
இத்தரை மீதே வாழ்கின்றோம்!"
    என்று தாமே மொழிகின்றார்!

நெற்பயிர் நன்கு விளையுங்கால்
    நெருங்கி வளருங் களையுந்தான்
நெற்பயிர் ஆகும் என்பாரை
    நியாய முணர்ந்தவ ரென்பீரோ?

இனமெனும் சொல்லின் பொருளென்ன?
    எடுத்துக் கூறிட மருளென்ன?
குணமெனக் குறித்தல் எதனைத்தான்?
    குறிப்பிட ஒல்லுமோ அதனைத்தான்!

இதனைச் சரிவர அறியாதார்,
    இனஅர சேற்கத் தெரியாதார்!
முதலில் இதற்கோர் விடிவுண்டா?
    மூட மதிக்கும் முடிவுண்டா?

## தொடர் கதை :




மாலை நேரத்தில் உலாவி வர, மாதவனும் அவன் தோழன் மூர்த்தியும், மாந்தோப்பினுள் புகுந்தனர். உலர்ந்து உதிர்ந்த சருகுகளின் மீது நடந்த பொழுது சல சல வென ஓசை யெழுந்தது.

நடந்து சென்று கொண்டிருந்த மாதவனின் காலில் முள் தைக்கவே, "அம்மா" என்று கூவி வேதனையோடு கீழே உட்கார்ந்து முள்ளை வெளியில் எடுத்தான். மூர்த்தி சிரித்தான்.

"வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் கண்டு சிரிக்கப் பழகுபவனே, வெற்றி பெறுவான் என்று சிறிது நேரத்திற்கு முன்பு எனக்கு உபதேசம் செய்து விட்டு, இப்பொழுது சிரிப்பதற்குப் பதில், ஏண்டா வேதனைப் படுகிறாய்?" என்று குறும்பான குரலில் மூர்த்தி கூறிக்கொண்டே மாதவனின் காலில் கசிந்த இரத்தத்தைத் துடைத்தான். திரும்பவும் இருவரும் எழுந்து நடக்கத் தொடங்கினர்.

மாமரங்களில் கொத்துக் கொத்தாய்த் தொங்கிக்கொண்டிருந்த பச்சைக் காய்களைக் கண்டு, இச்சைகொண்டு, அதில் ஒன்றைப் பறித்தான் மூர்த்தி.

"தோட்டக்காரன் கண்டால், திட்டப் போகிறான்!" என்று மாதவன் கூறி முடிப்பதற்குள், சிறிது தூரத்திலிருந்து ஒரு குரல் வருவதைக் கேட்டு, இருவரும் திடுக்கிட்டனர்! "அய்யோ! அம்மா!" என்ற வருத்தம் நிறைந்த குரலொலி காற்றில் மிதந்து வந்தது.

ஓசை வந்த திக்கை நோக்கி வேகமாக நடந்தனர்! தரையில் ஒருவன் களைத்து வீழ்ந்து கிடந்ததைக் கண்டதும், அவனருகே சென்றனர். மூர்த்தி வேகமாக அருகே யிருந்த கிணற்றிற்கு ஓடி, துணியில் தண்ணீர் நனைத்துக் கொண்டு வந்து, அவன் முகத்தில் பிழிந்தான். களைத்து வீழ்ந்திருந்தவன் கண்களைத் திறந்து பார்த்

தான்! "பொற்சிலை! பொற்சிலை!" என்று அவன் வாய் முணு முணுத்தது.

அவன் கண்கள் அடிக்கடி மிரண்டு மிரண்டு பார்த்தன! உதடுகள் அடிக்கடி அசைந்தன, ஆனால் வார்த்தைகள் வெளியில் வரவில்லை. அவன் பார்ப்பதற்குப் பரதேசிக்கோலத்தில் காட்சி யளித்தாலும், செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவனைப் போல, அவன் முகத்தில் பெருந்தன்மையும் அமைதியும் நிறைந்திருந்தன! கற்றுத் தெளிந்தவனைப்போல அவன் கண்களில் ஒரு தெளிவிருந்தது!

சிறிது நேரத்தில் அவன் எழுந்து உட்கார முயன்றான். மாதவன் மெதுவாகத் தூக்கி, அவனை உட்காரவைத்தான்.

"ஐயா, தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று மாதவன் பரிவோடு கேட்டான்.

"நான் யார், தெரியவில்லையா? அகப்படாமல், மறைந்து போன என் தமிழ் ஏடுகளைத் தேடி அலைந்து வருபவன் நான்!"

"தங்கள் பெயர்?"

"இலக்கியப்பித்தன்."

மூவரும் சிறிது நேரம் மௌனமாகவே இருந்தனர்.

"என் பொற்சிலையைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று சோகமான குரலில் இலக்கியப் பித்தன் வினவினான். இருவரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

"பொற்சிலையா?"

"ஆம்! ஆம்! பொற்சிலையைப் பார்த்ததே கிடையாதா? தூ! இவ்வளவு தானா நீங்கள்? அவள் என் மனைவியப்பா, என் மனைவி."

இலக்கியப் பித்தன் பேசும் முறையைப் பார்த்தால், அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்குமோ? என்று மாதவனும் மூர்த்தியும் எண்ணினர்.

"இரும்பல் காஞ்சியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?......என் விழிக்கிறீர்கள்?......அங்கே ஒரு சிற்ப வீட்டில் நான் பார்த்தேன்! ஆமாம், உண்மையாகத்தான்!"

இருவரும் எழுந்து ஓடி விடலாமா என்று கூட நினைத்தனர். இலக்கியப்பித்தனைத் தனியாக விட்டுச் செல்ல ஏனோ அவர்கள் மனம் ஒப்பவில்லை.

"ஏனப்பா, தமிழ் இலக்கியங்களைக் கண்டெடுக்க, நான் அலைந்து அலைந்து, சுற்றிச் சுழன்று வருகிறேனே, நீங்களும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது?" என்று கூறியதும், இலக்கியப்பித்தன், இளைப்புற்றுக் கீழே படுத்தான். சிறிது நேரம் கழித்துத் தானாகவே அவசரமாக எழுந்தான். அப்பொழுது அவன் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டான்.

தன்னிரு கைகளையும் வளைத்துப் பிடித்துக் கொண்டு "இதோ! இதோ! இவ்வளவு இலக்கியங்களையும் நான்தான் தேடிக் கண்டுபிடித்தேன்! இனிமேல்தான் இவைகளைப் படிக்கப் போகிறேன், தெரியுமா?" என்று பெருமிதத்தோடு உரக்கக் கூவினான்!

மாதவனும், மூர்த்தியும் விழித்தனர், ஒன்றும் புரியாமல்!

"ஏன் பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்! பாபம், உங்களுக்கென்ன தெரியும் பேச? இலக்கியங்களைப் படிக்கவேண்டுமப்பா, படிக்கவேண்டும்! அப்பொழுதுதான் அறிவு வளரும், பிறகுதான் பேசமுடியும்! புரிகிறதா?"

"தெரிகிறது!" என்றான் மூர்த்தி. இலக்கியப்பித்தன், ஆபத்தில்லாதவன் என்பது தெரிந்ததும் தைரியமாகவே பேசத் தொடங்கினர் இருவரும்!

"பொற்சிலை என்றீரே, அந்த அம்மையார் இப்பொழுது எங்கிருக்கிறார்கள்?" என்று மாதவன் கேட்டான்.

"அவளா? என் மனைவியா? எங்கே இருப்பாள்? என்னருகில்தான் இருக்கிறாள்!" என்று கூறிக்கொண்டே தன் மடியில் கட்டி வைத்துக் கொண்டிருந்த ஒரு கையெழுத்துச் சுவடியை வெளியே எடுத்தான்! அதன் மேல் பொற்சிலை என்று அழகாகப்பொறிக்கப் பட்டிருந்தது!

பொற்சிலையைக் கண்களில் ஒற்றிக் கொண்டு பிறகு இலக்கியப்பித்தன் அதனை மாதவனின் கையில் கொடுத்தான்.

"தம்பி! பத்திரமாக வைத்துக் கொள்! இவளை வைத்துக் காப்பாற்ற என்னால் இனிமேல் முடியாது! நீயே வைத்துக் கொள். பிறகு தேவையுள்ள போது வந்து வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறி முடித்ததும், அவன் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாக உதிர்ந்தது.

"இது என்ன?" என்று மாதவன் வியப்போடு கேட்டான்.

"இனிமேல் என்னால் பேச முடியாது! நீங்கள் போய் விடுங்கள்!......பொற்சிலை பத்திரம்!... உன் பெயரென்ன தம்பி?"

"மாதவன்"

'மாதவா, பொற்சிலை என் காதலி, மனைவி! பத்திரமாக வைத்துக் கொள்வாயா?"

"அப்படியே செய்கிறேன்."

"சரி! நீங்கள் போகலாம்! ......ஏன் மயங்கி நிற்கிறீர்கள்? ......அப்படியானால் நான் போய் விடுகிறேன்!" என்று கூறி, இலக்கியப்பித்தன், எழுந்து நடக்க ஆரம்பித்தான். இருவரும் திகைத்து அப்படியே சிலையைப் போல் பேசமுடியாமல் நின்றிருந்தனர்.

சிறிது நேரம் சென்றதும், "ஐயா! நில்லுங்கள்!" என்று உரக்க அழைத்தான் மாதவன். இலக்கியப்பித்தன் திரும்பியும்

பாராது, வேகமாக நடந்தான். மாதவன் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தான்.

"மூர்த்தி, இது அவருடைய வரலாருக இருக்குமா? அல்லது ......"

"படித்துப் பார்த்தால் தெரிகிறது"

இலக்கியப் பித்தன், தள்ளாடித் தள்ளாடி, ஆனால் சிறிது விரைந்து நடந்து சென்ற பரிதாபமான காட்சியைக் கண்டதும், அவர்களின் கண்களில் நீர் கசிந்தது.

இருவரும், நேராக வீட்டிற்குச் சென்று, அறையில் அமர்ந்து அச் சுவடியை ஆர்வத்தோடு படிக்க ஆரம்பித்தனர்!

* * *

இன்பமான மாலை நேரம்! பொற்கதிர்களைப் பொழியும் கதிரவன்! உள்ளம் சிலிர்க்க உலாவும் தென்றல்! செழித்து அடர்த்துப் பச்சைப் பசேலென்றுள்ள பயிர்கள் நிறைந்த வயல்கள்—அவற்றின் ஓரமாக என் தோழர்களும் நானும் காற்று வாங்கச் சென்றுகொண்டிருந்தோம்.

திடீரென்று நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். சிரித்துச் சிரித்து என் வயிறு வலித்தது. ஏன் சிரித்தோம் அந்த நேரத்தில்? யோசித்து யோசித்துப் பார்க்கிறேன், காரணமே நினைவிற்கு வரவில்லை!

வானமும் எங்களைக் கண்டு விலா நோகச் சிரித்தது! மேலே பார்த்தோம். காற்றிலே மிதந்து சென்றது கரு மேகக் கூட்டம். மின்னல்! இடி! திடுக்கிட்டோம் நாங்கள். செய்வது புரியாது திருடர்களைப் போல விழித்தோம்.

மழையைக் கண்டு, அஞ்சி ஓட ஆரம்பித்தோம். எத்திக்கு நோக்கி ஓடினோம்? தெரியாது! எந்நேரம் ஓடினோம்? கவனமில்லை! திரும்பிப் பார்த்தேன்! திடுக்கிட்டேன்! என் தோழர்களைக் காணோம்! தனியாக ஓடப் பயந்து நின்றேன். அவர்கள் எங்கே? புரியவில்லை! நான் இப்பொழுது எங்கிருக்கிறேன்? காட்டில்! எப்படி இங்கு வந்தேன்? ஆச்சரியமாகத்தானிருக்கிறது! மழையும் சிறிது நேரத்தில் மாயமாய் மறைந்து விட்டது.

காட்டிலே இருக்கக் கண்டு என் இதயத்தே ஒருவித அபூர்வ உணர்ச்சி பொங்கியது. காட்டு மலர்கள் அள்ளி வீசிய நறுமணம் என் உள்ளத்தைக் களிப்பில் ஆழ்த்தியது. ஏட்டில் படித்ததெல்லாம் காட்டில் இருக்கக் கண்டு மகிழ்ந்தேன். பொன்னிற வெயில், அழகிய தோகையை விரித்தாடிய மயில், சிவந்த அலகும் பச்சை உடலும் கொண்ட கிளிகள், கண்ணுக்குத் தெரியாத இடத்திலிருந்து கொண்டு காதுக்கு இசை பொழிந்த குயில், மாடப் புருவின் குக், குக் ஒலி, சிறு சிறு

குருவிகளின் இரைச்சல், வெண் சிறகுகளை அடித்துக் கொண்டு படை அணிவகுத்துச் செல் வதைப் போல வரிசை வரிசை யாகப் பறந்து சென்ற கொக்கு களின் கூட்டம், குதித்துக் குதித் தோடிய அணில்கள் —இவை யெல்லாம் என் உள் ளத்தில் தோன்றிய ஆச்சரியத் தையும் அச்சத்தையும் போக்கி, மன ஊற்றில் மகிழ்ச்சி நீர் பெருகச் செய்தன.

அழகிய இக்காட்சிகளைக் கண்டு நுகர்ந்து, இன்புற்ற வண் ணம் நடந்தேன். சிறிது தூரம் சென்றதும் கானாற்றின் இரைச் சல் கேட்டது. செடிகளையும் கொடிகளையும் விலக்கிக் கொண்டு, புதருக்குள் புகுந்து, சிறு சிறு பாறைகளின் மேல் கால் வைத்து நடந்து, ஆற்றங் கரையை வந்தடைந்தேன். ஆற் றில், நீர் சலசலவென ஓடிக் கொண்டிருந்தது. கரையிலிருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து, கால்களால் நீரை எத்தித் தள் ளிக் கொண்டிருந்தேன். நீர் மிகவும் குளிர்ச்சியாயிருந்ததால், உதைத்துத் தள்ளும் வீண் வேலையை விட்டு, குளிர்ச்சியுற ஆசைப்பட்டு, தண்ணீரிலேயே கால்களை வைத்துக் கொண் டிருந்தேன்.

ஓடும் நீரில், ஒரு அழகிய குருவிக்கூடு மிதந்து கொண்டு வந்தது. அந்தக் கூட்டைக் காணக்காண என் மனதில் ஏதேதோ எண்ண அலைகள் மோதின. இந்தக் கூட்டைக் கட்ட அந்தச் சின்னஞ் சிறு குருவி எத்தனை நாட்கள் எவ் வளவு பாடுபட்டதோ? எங் கெங்கு அலைந்து சிறு சிறு சுப் பல்களாகச் சேர்த்ததோ? முடி வில் கூடு சிதைந்து வீணா யிற்று, உழைப்பு பயனற்றுப் போயிற்று! இது போலத் தானே மனிதனின் உழைப்பும்! உழைத்துத் தான் அடையப் போவதாகக் காணும் இன்பக் கனவுகளும் சுக்குநூறாகச் சிதைந்து போகின்றன.

ஓடும் நீருடனேயே, ஓடிக் கொண்டிருந்த கூட்டின்கூடவே என் பார்வையும் ஓடிற்று. சிறிது நேரத்தில் கூடு மறைந்தது. நீண்டதூரம் சென்றுவிட்ட என்பார்வையைத் திருப்பும் போது, கானாற்றில் மற்றொரு காட்சியைக்கண்டு என் உள்ளம் திடுக்கிட்டது. என் இதயம் அசைவற்று நின்று விடுமோ என்ற அச்சமும் தோன்றியது. எழுந்து ஓடலாமென்று நினைத் தேன். எழுந்திருக்க முயன் றேன், முடியவில்லை! கால்களை வளைக்கவோ நிமிர்த்தவோ இயலவில்லை. கைகளை ஊன்றி யாகிலும் எழுந்து பார்க்கலா மென்று நினைத்தேன். கைகள் அசையவே மாட்டோம் என்று சொல்லி விட்டன. அந்நேரத் தில் என் உடலின் எந்தப்பாக மும் என் சொல்லைக் கேட்க மறுத்து விட்டது!

இப்படியாக என் உள்ளத் திற்கும் உடலின் உறுப்புக்களுக் குமே போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, ஆற்றில்

நீர் குடித்துக் கொண்டிருந்த புலியும் திரும்பிச் செல்லத் தொடங்கிற்று! நல்லவேளையாக அந்தப்புலி என் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. திரும்பிப் பார்த்திருந்தால்......அய்யோ! நினைக்கவே உள்ளமும் உடலும் நடு நடுங்குகின்றன. புலியும் புதர்களுக்கிடையே புகுந்து சென்று,மறைந்தது." அப்பா" என்று பெருமூச்சு விட்டேன்.

உயிர் பதை பதைக்கும் நேரத்தில் அத்துடன் ஒத்துழைக்க இந்த உடலேன் மறுத்து விட்டது? உயிர் இல்லையானால் தோல் போர்த்த இந்த எலும்புக் கூட்டிற்கு மதிப்பேது? உடலின் உறுப்புக்களே, ஆபத்து நேரங்களில் உதவி புரியப் பின்வாங்கும்போது, உடனிருப்போர் நெருக்கடியான நேரத்தில் உதவவில்லை என்று ஏன், வீணாக அவர்கள் மேல் கோபித்துக் கொள்ள வேண்டும்? இப்படி என் சிந்தனை ஆற்று நீர் போல ஓடலாயிற்று.

என் அருகில் திடீரென்று மறுபடியும் நீரினிடத்தில் சல சலப்புக்கேட்டது. "அய்யோ! செத்தேன் புலி!" என்று உரக்கக் கூவி, இருகண்களையும் இறுக மூடிக்கொண்டேன். யாரோ சிரிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தேன். என் அருகே நின்றிருந்தது புலி அல்ல, இளமையும் எழிலும் ததும்பிய ஒரு பெண்!

"பேரழகி! கட்டான உடல், வட்டமான முகம், நீண்ட கண்கள், அள்ளிமுடித்திருந்த அழகிய கரிய கூந்தல், அதிலே செருகப்பட்டிருந்த மலர்க் கொத்து, மடிப்புமடிப்பாகக் காட்சியளித்தகழுத்து,பொன்னவிர்மேனி, சிற்றிடை, ஏதோ ஒருவிதமான மேலாடை, உடை தென்றலொடு கலந்து ஆடி அசைந்து கொண்டிருந்த நிலை.........இப்படியாக அவளது அழகு உருவத்தை, எழில் தோற்றத்தை—என் மனத்திரையில் தீட்டிக்கொண்டிருந்தேன்.

"தாங்கள் யார்?" என்றாள் கண்களில் கோபக் கனல் வீச, கேள்வி கேட்டு முடிந்ததும் என் அருகில் வந்தாள்! அவள் போக்கு எனக்கு விநோதமாயிருந்தது. அமைதி நிறைந்த அழகியின் முகத்தில் ஒரு நொடிக்குள் எப்படி இவ்வளவு மாற்றம் ஏற்பட்டது?

"தாங்கள் யார்?—இப்படித் தானே கேட்டாய்?"

"ஆமாம்! அப்படித்தான்"

"நான் யார்? அதனைத் தானே நீ அறிய வேண்டும்?"

"ஆமாம்!"

"நான் யார்?...—" என்று கூறிக்கொண்டே என்னை நானே பார்த்துச் சிரித்துக் கொண்டேன். பிறகு அவள் முகத்தைப் பார்த்தேன். என்னையே

கண் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“எங்கிருந்து வந்தீர்?” என்று மற்றொரு கேள்வியையும் வேல் விழியாள் வீசினாள். நான் சிரித்தேன்.

“உன் முதல் கேள்விக்குப் பதில் தெரிந்துகொண்டு விட்டாயா?”

“எனக்கு அது இப்பொழுது தேவையில்லை!”

“ஓகோ! சரி! அப்படியானால் சிறிது நேரம் யோசித்துப் பார், இந்தக்கேள்விக்கும் பதில் அவசியமில்லை என்பதை நீயே அறிந்து கொள்வாய்!”

இப்படி நான் கூறி முடித்ததும், அவள் முகத்தில் குடிகொண்டிருந்த கோபம் எங்கோ திடீரென்று மறைந்தது. அவள் முகத்தில் மெல்லிய புன்னகை பூத்தது.

“ஏன் சிரிக்கின்றாய்?” என்றேன்.

“யார் சிரித்தது?” என்றாள். அவள் முகத்தில் நாணத்தின் குறிகள் தென்பட்டன!

“ஆமாம், சிரிக்கவில்லை. குறுநகை புரிகிறாய்! சரிதானே?”

“புன்னகை செய்வது கூடவா தவறு?”

இந்தச் சொற்கள் என் மனதில் ஏதேதோ உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பின. “தாங்கள் யார்?” என்று கோபக் கனல் வீசக்கேட்ட அவளே, “புன்னகை செய்வது கூடவா தவறு?” என்ற அளவிற்கு மாறிவிட்டாள் என்றால், என் மகிழ்ச்சிக்கு அளவிருந்திருக்க முடியுமா?

அவளது மலர்க் கண்களை உற்றுப் பார்த்தேன். அவள் தன் கால்விரலை நோக்கினாள். பொய்யாமொழியாரின் குறளொன்று என் நினைவிற்கு வந்தது.

“தாங்கள் எங்கிருந்து வருகிறீர்?” என்று, சுழலும் கண்களோடு அவ்வழகி வினவினாள். இப்பொழுது அவள் குரலில் கோபமில்லை, ஆனால் குழைவு இருந்தது.

நான் பிறந்த நாட்டை எண்ணினேன். என்னையும் அறியாமல் ஒரு பெருமிதம் உண்டாயிற்று!

சேர சோழ பாண்டியர் செங்கோல் செலுத்திய நன்னாடு! மூவேந்தர் திக்கெட்டும்சென்று வெற்றிக்கொடி நாட்டிய புகழ் நாடு! அன்னியர் அடி எடுத்து வைக்கவும் அஞ்சிய மறத்தமிழர் வாழ் வீரநாடு! கடல் கடந்து வாணிபம் செய்து கலம் நிறையப் பொருள் கொண்டுவந்து குவித்த பொன்னாடு! வள்ளுவரும் இளங்கோவும், கபிலபரணரும் போற்றி வளர்த்த முத்தமிழ் நாடு! நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சிடும் வளநாடு!

இப்படி நான் கூறிக்கொண்டே வரும்போது, என்றுமே தோன்றாத ஒரு களிப்பு என்

குரலில் தோன்றியது. இதனைக் கேட்கக் கேட்க அவள் கண்களில் ஒளி அதிகரித்துக் கொண்டே வந்தது. நான் பேசி முடித்தேன். அவள் முகத்தில் சோகமும், ஏமாற்றமும் குடிகொண்டன.

" அப்பொன்னேடே என் நாடும் !" என்ருள். அவள் குரலில் பெருமையில்லை, மகிழ்ச்சியில்லை, ஆனல் கவலை நிறைந்திருந்தது.

" இவ்விடமும் அந்நாட்டைச் சேர்ந்தது தானே ?"

" அந்நாட்டிற்குப் புறத்தேயுள்ள காடு சூழ்ந்த மலைப்பிரதேசம் இது !"

" வளமான இடத்தை விட்டு வரண்ட இடத்திற்கு ஏன் வந்தாய் ?"

" எங்கள் குடும்பத்தார், இவ்விடத்தை விட்டு வெளியில் செல்வதில்லை என்று விரதம் பூண்டிருக்கின்றனர் !"

" ஏன் ?"

" தாங்கள் நன்னடு, பொன்னடு, வீரநாடு என்றெல்லாம் கூறினீர் அல்லவா ? அதே நாட்டைப்பற்றி, நீங்கள் கூறியவற்றை எல்லாம் உங்களைப் போலவே பெருமையாகக் கூறி விட்டு என் தாத்தா வருத்தத்தோடு மேலும் கூறுவார். 'வளமான நாடுதான், ஆனல் வஞ்சகரின் வலையில் சிக்கி விட்டது ! வெற்றிகண்ட நாடுதான், ஆனல் வீரரைப் போற்ற மறந்து விட்டது ! சேரன், சோழன், பாண்டியன் பவனி வந்த நாடுதான் இன்று அன்னியன் ஆணவத்தோடும், அதிகாரத்தோடும் பவனி வரும் நாடாகி விட்டது ! புலவர் பிறந்த நாடுதான், இன்ருே தன் முத்தமிழ்க் களஞ்சியத்தையே இழந்த நாடாகி விட்டது—என்று ஏக்கத்தோடு கூறிப் பெருமூச்செறிவார் என் தாத்தா ! அவர் கூறும்பொழுது நான் அழுதே விடுவேன் " என்று தன் கண்களில் தோன்றிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டே கூறினுள் அந்த இளம் பெண்.

" இவளது தாத்தா, சீர்திருத்த நோக்கம் கொண்டவராகத்தான் இருக்கவேண்டும். அவரேன் இப்படித் தனியாகக் கானகத்தில் வசிக்கிருர் ?" என்றெண்ணினேன். அவள் தாத்தாவின் வரலாற்றை அறிய என் உள்ளம் துடி துடித்தது.

" உன் பெயரை நான் அறிவது தவறில்லையே ?" என்றேன் அன்பான குரலில். திரும்பவும் அவள் நாணத்தோடு புன்னகை புரிந்தாள். குயிலின் நாவசைந்து, எழும் இசையைப் போல இனிமையான இசைக் குரலில் மெதுவாகப் " பொற்சிலை " என்ருள் !

(தொடரும்)

Edited and Published by K. Anbazhagan M. A., at 10, Vellala St., Purasapakkam, Madra-7
Printed by K. V. T. Srinivasan at Sree Ranga Press, 1, Rajahanumanthalala St, Madras-5

தோழர்களே திரண்டு வருக!

# தூத்துக்குடியில்

பதினெட்டாவது

# திராவிடக் கழக

# மாகாண மாநாடு

(1948)-மே 1, 2,

நாட்களில்

நடைபெறும்

விரிவான ஏற்பாடுகள்

செய்யப்படுகின்றன.



# புது வாழ்வு

(மாத வெளியீடு)

விலை விவரம்:-

தனி இதழ் அணா 4.

ஆண்டுக்கட்டணம் ரூபா 3.

விளம்பர விகிதம்:-

| | | |
|---|---|---|
| அட்டை வெளிப்பக்கம் | ரூ | 120. |
| ,, உள்பக்கம் | ,, | 80. |
| உள்பகுதி முழுப்பக்கம் | ,, | 60. |
| ,, அரைப்பக்கம் | ,, | 30. |
| ,, கால்பக்கம் | ,, | 20. |

தொடர்ந்து செய்யப்படும் விளம்பரங்கட்கு இவ்விகிதத்தில் கழிவுண்டு. விபரங்கட்கு எழுதுக.

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. உடனே எழுதவும்.

[ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள ஹிங்கின் பாதம்ஸ் ஸ்டால்களிலும், 'புதுவாழ்வு' கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.]

மற்ற விவரங்கட்கு:-

நிர்வாகி,

'புதுவாழ்வு'

10, வேளாளர் தெரு,

புரசைபாக்கம் :: சென்னை-7.

தோழர்
இராதாமணாளன்
தீட்டிய

# இன்பக் கனவு

விரைவில் வெளிவருகிறது.
மாநாட்டில் கிடைக்கும்

விவரங்கட்கு:-

**புத்துலகப் பண்ணை**
வாத்தியார் கந்தப்பிள்ளை தெரு
வேப்பேரி, சென்னை - 7.

---

# 'மன்றம்'

(மாத வெளியீடு)
ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
தனி இதழ் விலை அணா எட்டு
ஆண்டுக் கட்டணம் ரூபா ஐந்து
விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு:-

நிர்வாகி 'மன்றம்'
30/79. செம்புதாஸ் தெரு, சென்னை—1.

---

# குயில்

ஆசிரியர்.
T. N. இராமன்
(தமிழ் அரசியல் வார இதழ்)

| சந்தா விவரம்:- | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்பிரதி விலை அணா | 0 1 0 | 0 1 6 |
| ஒரு வருட சந்தா ரூ | 4 0 0 | 6 0 0 |

உள்நாட்டிற்கு மட்டும் ஆறுமாத சந்தா ரூ. 2 0 0

'குயில்' பைக்கிராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

REGD. NO. M. 4972 


K.R. ராமசாமியின்

# கிருஷ்ணன் நாடக சபா

*16-4-48* முதல் 9-வது வாரம்

திருச்சி ரெத்தினவேலுதேவர் ஹாலில்

அறிஞர் C. N. அண்ணாத்துரை, M. A.

தீட்டிய

சிந்தனைச் சித்திரம்

# "வேலைக்காரி"

நாடகம்

தினசரி இரவு 10 மணி : ஞாயிறு மாலை 6-30 மணி

திங்கள் நாடகம் இல்லை.

டிக்கட் : 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0

எதிர்பாருங்கள் :

எமது புதிய நாடகம் விரைவில்...???


COVER PRINTED AT SREE RANGA PRESS, MADRAS. PAPER SUPPLIED BY PARTY